49

உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க.] விக்ரம ஆனி [இதழ் ந.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வேல்க!
இமிழ்முர சேழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்து முழி தமிழரண் தழைக! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

இன்னல் என்னும் இருட்குவைகள்
இரிய எறியும் எரிகதிரே!
இடையூ றுடையார் உடல்நலிதீர்
இனிதா மமுதப் புதுமதியே!
முன்னந் திகழ்முத் தமிழாழி
முளைத்துக் கிளைத்த முழுக்கலைகள்
முகிழ்க்கும் மாசி லாமணியே!
முறைசெயா ருள்ளத் தொளிர்விளக்கே!
கன்னல் கைக்குங் கனிமொழியால்
களைப்பை யகற்றுங் களைகண்ணே!
கன்னித் தமிழென் அன்னாய்! நின்
கமல மலர்த்தாள் துணையன்றித்
தன்னந் தனியிற் புலம்புறுமித்
தமியேற் கொருசார் பினியுளதோ!
தகைசால் புலவோர் புகழுருவாய்த்
தழையும் எழில்நீள் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

60

மாசிலர் மணி ஒளி !

ஸ்ரீலஸ்ரீ கார்மேக சுவாமிகள்

தலைவர் ஸ்ரீமத் வையாபுரி சுவாமிகள் மடாலயம், குடியேற்றம்.

22-6-40௳ அன்று புகழுடம்பெய்திய சிவ. ஆ. மாசிலாமணி முதலியார் அவர்கள் சிறந்த குரு, லிங்க, சங்கம பத்தியும், பழுத்த தமிழ்ப்பற்றும், நிரம்பிய புலமையும், நேரிய ஒழுக்கமும் உடைய ஒரு பெரியார். அன்னார் அருமந்த மகவாகிய நம் தமிழணங்காசிரியர் அவர்களே அவர்களின் உயர் தகைமைகட்கொரு சான்றென விளங்கு கின்றார்கள். இப்பெரியார் பருவுடல் நீத்தமை யாவர்க்கும் வருத்தத்தை விளைவிப்பதாம். எனினும் நீரில் எழுத்தாகும் யாக்கைநிலையுன்னி அனைவரும் அன்னார் குடும்பத்தினரும் ஆறுதல் உறுவோமாக.

தமிழணங்கூழியம் தலைசிறந்தோங்குக !

என்னருமைத் தமிழாசிரியர் சிவ. ஆ. மாசிலாமணி முதலியார் அவர்களின் பிரிவு அவரிடத்தில் பயின்ற எனக்கும் என்போன்ற மாணவ கோடிகட்கும் மற்றெவர்க்கும் ஆறாப் பெருந்துயர் விளைவிப்பதாம். ஆரணியில் இருந்த போர்டு நடுத்தரக் கலைக்கழகம் உயர்தரமாக மாறியபோது முதல்முதலாகத் தமிழாசிரியப் பதவி வகித்தவர்கள் இவர்களே. அன்பு, அருள், இரக்கம், வாய்மை, முதலிய உயர்குணங்கட்கு உறையுளாகிய நம் முதலியார் எப்பொழுதும் இன்சொல்லும், மலர்முகமுங் கொண்டு விளங்கும் பேரழகினர். இவர்கள் எப்பொருளையும் மாணவர்க்குச் சிக்கறக் கற்பிக்கும் சொல்வன்மை நிறைந்த நல்லாசிரியர் ஆவார்கள். இவர்கள், ஆரணி உயர்தரக் கலைக்கழகத்தில் தமிழாசிரியப் பதவி வகித்தபோது அப்பதவியை விரும்பிப் போட்டியாக வந்த புலவர் பலருள் இவர்களே யாரும் வியப்புறத் தேறி அப்பதவியில் நிலைத்தனர். இவர்களைப்பற்றி இனித் தனியே வெளிவரவிருக்கும் இவர்களின் வரலாற்றில் நன்கறியலாம்.

இப்பெரியாரின் அருந்தவப் புதல்வரும் என் கெழுதகை நண்பரும் ஆகிய நம் தமிழணங்காசிரியரவர்க்கும் அவர்களின் குடும்பத்தினர்க்கும் என் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

V. சந்திரநாதன்,

ஆசிரியர், ஆம்பூர்.

மாணவ ரந்தாதி.

திரு L. S. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள்
தமிழ்ப் புலவர்,
முனிஸிபல் ஹைஸ்கூல், திருப்பத்தூர்.

நூல்.

பூமேவு மம்மைத் திருவருள் கோரிப் புகலரிய
நாமேவு வன்மை பெறுமா ணவரே! நயந்துரைத்தேன்
கோமேவு சிம்மா தனந்திகழ் செங்கோல் கொடுநடத்தல்
தேமேவு நுங்கண் முயற்சியைச் சேர்ந்தது தேர்ந்திடுமே. (1)

தேர்ந்திடும் யேசு திருநபி புத்தர் திருச்செயலை
யோர்ந்திடில் பல்லுயிர் ஒன்றே யெனுநிலை யுண்ணிலவி
யார்ந்திடும் மாணவீ ரம்முறை ஏற்றுநீ ராற்றினிகல்
சேர்ந்தநம் நாட்டின் மிடித்துயர் வீழ்த்துந் திறனிதுவே. (2)

திறங்கவின் தன்னலம் பார்ப்போன் விலங்கினைச் சேர்ந்தவனே
அறன்வழி யின்னலம் பார்ப்போன் அதனினு மாகுவன்மேல்
சிறந்ததென் னாட்டின் பொதுநலம் பார்ப்போன் தெளிவுடையோன்
பிறந்த எல்லோரையு நேர்படப் பார்ப்போன் பெருந்தகையே. (3)

பெருந்தகை மாணவீர்! நும்முளத்தில்லதைப் பேரறிவால்
பெருந்தனி யாம்வெளிக் காணினுங் காணீர் பிறங்குமன்பே
இருந்திட லஃதே உலகுயிர் கட்கெலா மின்கருணை
தருந்திரு வாமென வோதிடு நந்தந் தமிழ்மறையே. (4)

தமிழ்மறை சித்திரங் கைத்தொழில் காவியஞ் சார்இசையும்
உமிழ்திரை நீர்க்கலை மண்கலை வான்கலை யோர்ந்தினிதே
அமிழ்தொளி காலு மியற்கையின் தோற்ற மருந்திறனி
தமிழ்க்கலை கற்பீர்! தினமா ணவரே! தரைமிசையே. (5)

தரைமிசை யோங்கிடும் மேனாட் டுறுமவர் தந்நிலையில்
புரைதவிர் வாயின நும்முளம் நிற்கப் பொருந்தியினிக்
கரைபுரண் டேக வணிவகுத் தேநலங் காண்வகையில்
விரைமலர்த் தாரணி மாணவீர்! வாழுமின் வீறுடனே. (6)

வீறுகொண் டின்றே எழுந்திடுங் காலம் மிகவிரைவில்
ஆறுகொண் டேகுதல் போல்வீண் ஏகுதே யாழ்ந்தபெரும்
பேறுகள் கொண்ட நமதெண முன்றுறப் பின்னிளையீர்!
தேறுக தேய நலங்கொள மாணவீர்! தீவரமே. (7)

தீவர மாயோர் குடைக்கீழ் அசோகத் திறன்மனனும்
காவிரைக் கற்பக விங்கிலாந் தால்பரெட் காவலனுங்
கோவியல் காத்திறை நேரமும் ஓபாக் குடிவளனை
மேவியே யாண்டனர் மாணவீர்! அம்முறை மேற்கொளுமே. (8)

மேற்கொளு மன்பே உயிர்நிலை யாகி மிகுகருணை
யாற்கொளும் இன்பாம் இறையவன் மேவு மணிவடிவென்
றேற்புறு நெஞ்சி னிறைந்திட வேண்டும் இருங்கடல்சூழ்
நாற்றிசை யோரும் புகழ்தர மாணவீர்! நலஞ்சிறந்தே. (9)

சிறந்தொளி ரன்பே யருங்குண மென்று செகமனைத்து
முறைந்துள மக்கள் உணர்வினி லூறி யொளிருமெனிற்
றுறந்தவர் வைகும் துறக்கமாய் இத்தரை தோன்றுமென
வறைந்தனர் புத்தர் திருமா ணவரே யகங்கொளுமே. (10)

அகங்கொளுந் தூய்மை யழகே அழகென ஆன்றவரில்
செகப்புகழ் ஏசு மொழிந்தனர் செந்தமிழ்த் தேசிகனென்
றகம்பல கூற உயரும்திருவி மணவழகன்
பகர்ந்ததும் மாணவ ரேயுளங் கொண்டு பதித்திடுமே. (11)

பதித்துணர் நெஞ்சினில் ஜான்டி இராக்கு.பலரெனுமோர்
நிதிக்குவை யாளன்ஸர் வில்லியம் மோரீஸ் நெடுந்தரையில்
பிதிர்தரு செல்வம் இலாதிருந் தின்று பெருந்தனிகர்க்
கதிபதி யாயினர் மாணவ ரேசிக் கனமறிந்தே. (12)

சிக்கறக் கற்றிட நூல்நிலை யொன்று திறந்திடுவீர்
மிக்கறி வோங்க வுழைப்பவர் தம்மை வியனுலகம்
தக்கநல் சீர்திருத் தஞ்செய் பவரெனத் தாங்கிடுமால்
எக்குறை யுங்கொளா மாணவ ரேஇஃ தியற்றுமினே. (13)

(தொடரும்.)

வெண்காட்டு நங்கையார்.

திரு. அ. சிதம்பரநாத செட்டியாரவர்கள் M. A;
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

வெண்காட்டு நங்கை என்பார் சிறுத்தொண்டர் என்பாரின் அரிய கற்பின் மனைவியார். ஒருநாள், அவர் மனைக்கடன் செய்து கொண்டிருக்குங் காலத்தே வீட்டின் எதிரே நின்று பயிரவ ரொருவர் சோறளிக்குஞ் சிறுத்தொண்டர் அகத்தே உள்ளாரோ எனக் கேட்டார். தாதியார் சந்தனம் என்பார், "அவர் அடியாரைத் தேடி வெளியே போனார். அகத்துள் எழுந்தருளும்" என்றார். "மாதரார் இருக்கும் இடத்தில் தனியே புகமாட்டேம்" என்று அவர் கூறுவதைச் செவியுற்ற வெண்காட்டு நங்கை வெளிப்போந்து, "சிவனடியாரை அமுது செய்விப்பார் இன்று ஒருவரையுங் காணாது தேடிப் போனார். உமது திருவேடங்கண்டால் தம் பேறென்றே மிக மகிழ்வர். இனித் தாழார். இப்பொழுதே வந்திடுவர். எழுந்தருளி இரும்" என மொழிந்தார். "ஒப்பில் மனைபறம் புரப்பீர்! உத்தராபதி உள்ளோம். செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டரைக் காணவந்தனம். அவரின்றி இங்கிரோம். கணபதீச்சரத்தின் கண் ஆத்தியின்கீழ் இருக்கின்றோம்" எனப் புகன்று பயிரவர் போனார்.

நாதனடியார்முன் நயப்பாட்டு வழிபாட்டால் மிகச் சிறியராய் அடைந்து தொண்டியற்றி வந்தார் ஆகலின் அப்பெயர்பெற்ற சிறுத்தொண்டர் அன்று பகலில் நெடுநேரமாகியும் அடியாரொருவரும் தம் வீட்டில் உண்ண வந்திலராதலின் திருச்செங்காட்டங்குடி முழுதுஞ் சுற்றித் தேடியும் ஒருவரையுங் காணமாட்டாது இடுக்கணுற்று இல்லம் எய்தினர். சிவனடியாரை நாடோறும் முன்னூட்டிப் பின்னுண்பதை நியதியாகக் கொண்டுள்ள அவர் அடியாரொருவர் காணப்பட்டிலர் என்பதைத் தம் காதல் மனைவியாரிடம் இயம்பி இரங்கிட, அவரும் முன் வயிரவரொருவர் வந்தவர் ஆலயத்தின் ஆத்தி நிழற்கீழ் இருப்பதாகச் சொல்லிச் சென்றமையைத் தெரிவித்தார்.

உடனே சிறுத்தொண்டர் ஆங்குச் சென்று அவ்வடியாரைத் தம் மனைக்குப் போந்து உண்ணுமாறு வேண்ட, அன்னார் சில நிபந்தனைகள் கூற அவற்றிற்கு உடன்பட்ட பிற்பாடு அப்பெரிய பயிரவர்

இணங்கப்பெற்றுத் திரும்பினர். அன்புமிக்க காதலியார் அவரது வரவையே எதிர்நோக்கி நின்றுகொண்டிருந்தவர், அவர், வந்ததும், விழுந்து வணங்கி அடியார்திறம் கேட்டார். அதற்கு அவர் "அமுது செய்ய இசைந்தார். ஆனால், குடிக்கு ஓர் சிறுவனுய்க் கொள்ளும் பிராயம் ஐந்துளனுய் உறுப்பிற் குறைபாடின்றி, தாய் பிள்ளையைப் பிடிக்க உவந்து பிதா அரிந்து சமைக்கப் பெற்றுலே அவர் இசைவது" என்றார். மனைவியார், "அவர்க்கு அமுது அமைப்போம். ஆனால், ஒரு குடிக்கு ஒருவனே யாகிவரும் அச் சிறுவனைப் பெறுமாறு எவ்வாறு?" என்று கேட்டு வணங்கினர். சிறுத்தொண்டர் "இத்திறத்து மைந்தரை நினைவு நிரம்ப நிதி தந்தால் தருவார் இருக்கின்றார். ஆயினும், தனையன்முன் நின்று அரியும் தந்தை தாய் இல்லை. ஆதலால், தாமதமின்றி நம் மகவையே அழைப்போம் யாம்" என்று கூறினர். திருவெண்காட்டம்மை அதற்கு இசைந்து, "பள்ளியினிற் சென்று நம் கண்மணியைக் கொண்டு வாரும்" என்றார். அங்ஙனமே அவரும் போய்க் கொண்டு மீண்டாராக மைந்தனை வாங்கிக் கோலமெல்லாஞ் செய்து கணவனர் கையிற் கொடுத்தார் காரிகையார்.

இயைந்த கேண்மையர் இருவரும் குழவியொடு அடுக்களைக்குட் புகாமல், மறைவான வேறோர் இடத்திற் புகுந்தனர். தாயார் கலங்களை நன்றாகக் கழுவிக்கொண்டு வந்தார். தந்தையார் நல்ல மகனை எடுத்துத் தலையைப் பிடித்தார். தாயாரும் விரைந்து புதல்வனுடைய காலிரண்டையும் தமது மடியின்புடை இடுக்கிக்கொண்டு கையிரண்டையும் கையாற் பிடித்துக்கொள்ள, தாதையார் கருவியாற் சிரத்தை அரியலுற்றார். மூவர் மகிழ்ச்சியொடும் அரிய வினை செய்யப்பட்டது.

தலையொழிந்த பிற உறுப்புக்கொண்டு கறியாக்கி, வேறு பல கறிகளுஞ் சோறுஞ் சமைத்துக் கணவரிடத்துக் காதலியார் உரைக்க, அவரும் போய் ஆத்திமரத்தின்கீழ் இருந்த அடியாரை அழைத்து வந்தார். அடியாரை வணங்கி ஆசனத்து அமருமாறு காட்டினர் அம்மையார். பின், கையில் செம்பை ஏந்தி நீர் வார்த்தார். சிறுத்தொண்டர் அடியாருடைய அடிகளை விளக்கிப் பூசனை பலவுஞ் செய்த பிற்பாடு, வனிதையாரும் வள்ளலாரும் அவ்வடியாரை நோக்கிச் சோறுங் கறியும் படைக்குமாறு எவ்வாறென்று பகரும்படி வணக்கத்துடன் கேட்டனர். அவர், "அன்னமுடன் கறிகளெல்லாம் ஒக்கப்படைக்க" என்றார். அங்ஙனமே படைக்கப்பட்டதைப்

பார்த்து "எல்லா உறுப்புங்கொண்டு கறியாக்கி அமைத்தீரோ" என்று வயிரவர் வினவ, வெண்காட்டு நங்கையார், "தலையிறைச்சி திருவமுதுக்கு ஆகாது எனக் கழித்தோம்" என விளம்பினர். அவரோ, "அதுவுங்கூட நாம் உண்பது" என்றார். சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர் மனையாரோடும் திகைத் தயருஞ் சமயத்தில் தாதியார் வந்து உதவினர். முன்னரே மறைத்து நீக்கும்படி சிறுத்தொண்டரால் கொடுக்கப்பட்ட தலையை வாங்கிய இவர், அதனைக் கழித்து விடாது அடியார்க்கு ஒருகால் வேண்டும் எனப்படும் என்று கறியாக்கி வைத்திருந்தார். அதை இப்பொழுது அத்தாதியார் கொடுக்க, மகிழ்ந்து வாங்கிப் படைத்து வணங்கினர் சிறுத்தொண்டர்.

அதற்குமேலும் சோதனைசெய்ய நினைத்த பயிரவப்பெருமான் "தனி உண்ண நமக்கு ஒண்ணாது. ஆதலால் ஈசனடியார் இப்பாங்கு நின்றாரைக் கொணர்வீர்" என்றார். ஏங்கிய மனத்துடன் வெளியிற் சென்ற திருத்தொண்டர் சிவனடியாரை எங்குங் காணாராய் வருந்தி மீண்டு பணிந்து, "காணேன்; என் செய்வேன்! நானும் திருநீறு இடுந் தொண்டர்க்கே இடுவேன்" என உரைத்தார். "உம்மைப் போலத் திருநீறு இட்டாருளரோ! நீர் உண்பீராக" என்று வயிரவர் அவர்க்குச் சொல்லி, "அம்மையே! கலத்தைத் திருத்தி வெவ்விய இறைச்சியுஞ் சோறும் படையும்" என்று நங்கைக்கு உரைத்தார். படைக்கப்பட்டதை உண்ணத் தொடங்கிய சிறுத்தொண்டரைப் பயிரவர் தடுத்து, "ஆறு திங்கட்கு ஒருமுறை உண்ணும் நாம் உண்ணுமளவும் தரியாமல், நாடோறும் சோறுண்ணும் நீர் முன் உண்பதோ? உம்மொடு இகலாது மகவு இருந்தால், அவனை நம்முடன் உண்ண அழையும்" என்று கூறினர். "இப்போது உதவான் அவன்" என்ற மாற்றத்தைக் கேட்டதும், வயிரவர், "நாம் இங்கு உண்பது அவன் வந்தால், நாடி அழையும்" என்றார். எழுந்து மனைவியோடுட் அகத்தின் புறத்தே போய், "மைந்தா வருவாய்" என அழைத்தார் தந்தையார், "செய்ய மணியே! சீராளா!! வாராய்?" என்று ஓலமிட்டார் தாயார். பரமராருளாற் பள்ளியினின்று ஓடி வருவான்போல் வந்த மைந்தனை எடுத்துத் தழுவிக் கணவனாருடைய கையிற் கொடுத்தார். உடன், அவர் உட்சென்று பார்க்க, செய்ய மேனிப் பயிரவரைக் கண்டிலராய்த் திகைத்து வெளியே வந்து, வெள்விடைமேல் தலைவரையும், மலைமகளையும், சரவணத்துத் தனையரையும் தம் மனைவியாரொடும் கண்டு பரவசமாகி விழுந்து எழுந்து ஏத்தினர். இம்மூவரையும், இவர் தம் தாதியாரையும் உடன்கொண்டு ஏகினர் அம்மூவரும்.

மலை நலம்.

வித்வான் திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
அவர்கள், போளூர்.

நாம் வாழும் உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு என்ற ஐந்தும் கலந்தது. இவற்றுள், நிலத்தில் நீரும், நெருப்பும், காற்றும் இருக்கின்றன. இந்நிலத்தில் ஆழ்ந்த பகுதிகளில் நீரும், ஏனைப் பகுதிகளில் நெருப்பும் காணப்படும். மிக ஆழ்ந்த கடலகத்தே நெருப்புக் காண முடியாது; ஆனால், மிக வுயர்ந்த மலை முடிகளில் நீரும், நெருப்பும் காண முடியும். இதனால், மிகமிக ஆழ்ந்த நிலப் பகுதியாகிய கடலினும் நீரும் நெருப்பும் நிலவத்தக்க நிலக்கூறுகளாகிய மலைகள் இவ்வகையில் சிறப்புடையவை என்பது நன்கு விளங்கும். இம்மலைகளைப் பற்றிச் சிறிது இங்கே கூறுவோம்.

மலையென்பது என்னை? அடிபரந்து, நுனிகுவிந்து, நிலப் பகுதியைவிட மிக வுயர்ந்து, மண்ணும் கல்லும் மரமும் புதர்களும் செறிந்து, வானளாவி, மழையினம் தழுவ ஓங்கி நிற்கும் நிலக் கூறுகளே மலையெனப்படும். மலையிடத்தே மேலும், கீழும், பக்கலிலும் அடிநிலத்தும் மிகப்பெரிய காடுகளும், காட்டாறுகளும், கானருவிகளும் காணப்படுகின்றன. இம்மலைகள் யாறுகள் பலவற்றிற்கும் தோற்றுவாயாகவும் உள்ளன. ஒரு மலையின் அடிவாரத்தில் மரஞ் செறிந்துவயங்கும் பொதும்பருட் சென்று சிறிது உலவுவோமாயின், ஆங்குச் சில்லென வீசும் மெல்லிய காற்று உல்லாசஞ்செய்ய, பல வகைப் பூக்கள் மலர்ந்து நறுமணம் கமழ, ஆங்காங்கு வாழும் பறவையினம் தீவிய இசையினைமிழற்ற, மலையினின் றிழியும் அருவிநீர் சலசலவென வீழ்ந்தொலிக்க, அவற்றைக் கண்டு மகிழும் நாம் மெய்ம்மறந்து போகின்றோம். என்னே மலையின் அழகு! வெம்மைக் காலத்தும் தண்மையேசெய்யும் வெற்பின் பொற்பினை என்னென்று விளம்பலாம்! இம்மட்டோ? ஆங்கு, வாழ விரும்பும் மக்கட்கே யன்றி, இம்மலை, மாக்கட்கும் விலங்குகட்கும் மிக்க இன்பம் அன்றோ செய்கின்றது! மாவினம் அங்குள்ள பரந்த காடுகளில் இனஞ்சூழத்திரிந்து மலையருவியின் தெளிநீரைப் பருகிக் களிகூர்ந்து வாழ்கின்றன. மலைவனங்களில் வானளாவிய மரங்களும் மருத்திலைகளும், மருத்துப் பூடுகளும், கிழங்குகளும், காய்கனிகளும், பெருகக்

கின்றன. புள்ளினம் அங்கிருக்கும் மாச்செறிவுகளிலும் பசிய காடுகளிலும் பறந்து பாடி இன்புறுகின்றன. இவற்றையெல்லாம் புறக்கண்ணாற் கண்டு அகக்கண்ணால் எண்ணி நோக்கின், இயற்கையில் நுண்ணிதாய் விளங்கும் தெய்வ அழகு, தன்பொலிவைத் தோற்றுவித்தற்கு மலையினையே இடமாகக் கொண்டிருப்பது இனிது விளங்குகின்றதே. இங்ஙனம் பல நலங்களையும் செய்து வானுலகத்திற்குச் செல்லும் வழிபோல் நிற்கும் இவ்வளவிய மலையின் பெருமையை என்னவென்று இயம்புவது! இளமைக் கடவுளாகிய முருகன் இருப்பது இம்மலையகமே! திருமகள் கேள்வனாகிய திருமால் இருப்பது திருவேங்கடமலையன்றோ! செந்தமிழ்க் கடவுளாகிய சிவபெருமான் செம்மாந்து வீற்றிருப்பது இமயவரையன்றோ! புலவரையிறந்த புலவர் பெருமகனான குறுமுனிமேயது பொதிகைமலை தானே!

இனி, இம்மலைகள் இவ்வாறு காண்பார் கண்கட்குக் காட்சி விருந்து நல்கிச்செய்யும் சிறப்பினைப் பொதுவகையாகக்கண்ட நாம், அவை நம் தண்டமிழ்ச் சான்றோர் கண்முன் எவ்வெவ்வகையின் இன்பந்தந்து மகிழ்வித்து அவர்தம் பாடல் சான்றன என்பதை நோக்கும் கடமையைப் பெறுகின்றோம். எனினும், இதற்கிடையே இவற்றின் தோற்ற வரலாற்றை அறிதற்கு அவா எழுகின்றதன்றோ! அதனை நோக்குவோம்.

ஒருகாலத்தில் நாம் வாழும் நிலவுலகும், நம் தலைக்குமேல் விண்ணிடத்துத் தோன்றும் மீன்களும், கோள்களும், ஞாயிற்றினிடத்தே ஒன்றியிருந்தன. அஞ்ஞான்று, இவையனைத்தையும் தன்பாற்கொண்டதொரு பெருநெருப்புருண்டையாகவே ஞாயிறும் இருந்தது; இன்றும் அஃது அவ்வாறே யுளது. எனினும், சிலகாலத்திற்குப்பின், அதன் சில பகுதிகள் தெறித்து, பொறிபோற் கிளம்பி வானத்திற் பறக்கலுற்றன. அவை எவ்வாறு தெறித்தனவோ, அது தெரிந்திலது. தெறிப்புண்டும், அவை ஞாயிற்றின் பிணிப்பினின்று முற்றவும் விடுபடவேயில்லை. கட்புலனாகாக் கயிறொன்றாற் பிணிப்புண்டனபோல, அவை ஞாயிற்றோடு பிணிப்புற்று, அதனையே சுற்றித் திரிகின்றன. மேலே எறியப்பட்ட கல்லொன்று மீட்டும் நிலத்திற்கே வந்தடைதற்குக் காரணமாகும் பிணிப்பே போலும் ஒரு நுண்பிணிப்பு அவற்றிற்கும் ஞாயிற்றிற்கும் உண்டு. இதனை இக்காலத்துச் சிறுவரும் இனிது அறிந்திருக்கின்றனராதலின், இதனை ஈண்டு விரித்தல் வேண்டாக் கூறலாகும்.

ஞாயிற்றிலிருந்து தெறித்துப்போந்த இந்நிலவுலகும், பண்டை நாளில் மிக்க வெப்பமுடையதாய் வெவ்விய வாயுக்கள் சூழவிருந்தது. ஆயினும், இது ஞாயிற்றைவிட மிகச் சிறியதொன்றாகையால், நாளாவட்டத்தில் குளிரத் தொடங்கிற்று.

ஞாயிறும் இவ்வாறே வெப்பம் குறைந்துகொண்டுதான் வருகிறது. ஆயினும், அது குளிருவதற்குக் கோடிக்கணக்கான ஆண்டுகள் கழியவேண்டும். நிலவுலகு குளிர்வதற்குச் சிலபல இலக்கக் கணக்கான ஆண்டுகளே கழிந்தன. மேலும், இது நெருப்புருண்டையாய் இருந்த காலத்தில் இதன்பால் மக்களோ, விலங்கோ, வேறு உயிர்வகைகளோ எவையும் இருந்திருக்க முடியாது. ஒருகால் எவையேனும் இருக்க நினைந்து அதனை யணுகியிருப்பின் அவையப்பொழுதே எரிந்து சாம்பராய் அழிந்து போயிருக்கவேண்டும்.

ஞாயிற்றினிடமிருந்து ஒரு சிறுபகுதி தெறித்துக் குளிர்ந்து நிலவுலகென மாறியது போலவே, இந்நில வுலகத்தினின்றும் ஒரு சிறுபகுதி தெறித்துக் குளிர்வதாயிற்று. அதுவே நாம் இன்று திங்கள் எனவும் சந்திரன் எனவும் கருதுவதாகும். இந்நிலவுலகில் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள பசிபிக் பெருங் கடலே, தெறிந்து நீங்கிய அத்திங்களின் பண்டைய இடமாதல் வேண்டும் என அறிஞர் பலர் எண்ணுகின்றனர்.

மேலே கூறியவாறு நிலவுலகும் குளிர்ந்து வருவதாயிற்று. இதற்காகப் பல இலக்கவளவாய ஆண்டுகள் சென்றன. சிறிது சிறிதாக இதன் மேற்பகுதி ஆறிவரத் தொடங்கிற்று; உட்பகுதிமட்டில் வெவ்விதாகவே இருப்பதாயிற்று. இதன் மேற்பகுதியைக் குடைந்து நிலக்கரியெடுக்குமிடங்களில் அடியிற் செல்லச் செல்ல வெப்பம் மிகுந்து வருதலை நாம் அறிகின்றோம். எவ்வளவுக் கெவ்வளவு ஆழ்ந்து செல்லுகின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு வெப்பம் மிகுந்தே தோன்றுகின்றது. மேலும் குடைந்து சென்று காண்போமாயின், ஆங்கே செக்கர்ச் சிவர்ந்த நெருப்பினையும் காண்டல் கூடும். திங்களும் இவ்வாறே குளிரத் தொடங்கிற்று. இது நம்நிலவுலகினைவிட மிகச் சிறியதாகையால், இஃது அதனைவிட விரைவில் குளிர்ச்சி பெறுவதாயிற்று. திங்கள் பார்வைக்கே மிகக் குளிர்ச்சியாக விருக்கிறதன்றோ? இதனைக் "குளிர்மதியம்," "பனிமதியம்" என்பதும் வழக்கன்றோ! ஒருகால், இது பனிமலையும் பனிநிலமும் நிறைந்திருக்கும்போலும்.

தொடரும்.

59

குடை நிழல்.

திரு. K. P. சந்தோஷம் அவர்கள் B. A; L T;
தலைமையாசிரியர்,
ஊறீஸ் உயர்தரக் கலைக்கழகம், வேலூர்.

மங்கலப்பொருள்களென்று கருதப்படுகின்றவற்றுள் குடையுமொன்று. நன்மையைக் குறிக்கின்றவற்றை மங்கலப்பொருள்களென்பது வழக்கு. குடையாற் குறிக்கப்படுகின்ற நன்மை யாதெனின், நிழல். கதிரவன் சினந்து காய்கின்ற நமது நாட்டைப் போன்ற நிலங்களில் நிழலென்பது யாவராலும் பெரிதும் விரும்பப் படுகின்றது. "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே" என்பதில், இறைவனது இனிய அருள் குளிர்தருகின்ற மரநிழலைப்போன்றதென்று வள்ளலார் கூறியதைக் காண்கின்றோம். அடிதாங்கக் கூடாத அளவு நிலஞ்சுட, உடல் பொறுக்கலாகாத அளவு வெயில் எரிக்கின்ற நாட்டிலே நிழலை மக்கள் மிகமிக நச்சுகின்றனர். இவ்வாறு எவரும் விரும்புகின்ற நிழலைக் கொடுக்கின்ற குடையை மங்கலப்பொருளென்று கொண்டதில் வியப்பொன்றுமில்லை. மங்கலப்பொருளைக்கண்டால் நினைத்தவினை இடையூறின்றி நிறைவேறு மென்ற நம்பிக்கையுடைவர்பலருண்டு. இதை ஆராய்வது நமது நோக்கமன்று; இது ஆராய்ச்சிக்குட்படுவதுமன்று. குடை மங்கலப்பொருளாவதன் காரணத்தைக் காட்டுவதே நமது நோக்கம்.

குடையேயன்றி மரமும் நிழல் தரும்; மலையும் நிழல் தரும்; வீடும் நிழல்தரும். இவற்றைவிடக்குடை சிறந்த தெங்ஙனமெனின், மரநிழலும், மலைநிழலும், வீட்டு நிழலும் நாம் நினைத்தவிடத்திற்கு வாரா; அவை தம் இடத்தைவிட்டுப்பெயரா; எப்பொழுதுமொரு நிலையிலிரா. குடை நிழலோ நம்முடன்வரும்; எத்திசையுந் திரும்பும்;எக்காலமுங்கிடைக்கும். மற்றும், ஊன்று கோலாகவும், தூண்டு கோலாகவும், தாக்குங் கருவியாகவும், காக்குங்கருவியாகவும் குடையை அவரவர் திறமைக்கேற்ப வழங்கலாம். காக்குங்கருவியாவதே அதன் பெருமை. இதுகுறித்துப் பின்னர்ப் பேசுவாம்.

மேற்குறித்தவையேயன்றி நிழல் தருங்கருவிகள் பிறவுமுள. இந்நாட்டில் ஐரோப்பியர் அணிகின்ற தொப்பிகள் முகத்திற்கு நிழல் தருமாறு அமைக்கப்பெற்றிருக்கின்றன. இத்தகைய தொப்பிகள் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய மேல் நாடுகளிற் காணப் படுவதில்லை. நமது நாட்டிலும் மலையாளப் பகுதியில் மூங்கிலாற் செய்யப்பட்ட குடைபோன்ற தொப்பிகளை யணிந்துகொண்டு காட்டில் வேலை செய்கின்ற மக்களிருக்கின்றனர். இதைப்போன்ற தொப்பிகளைக் குடைகளென்றே சொல்லவேண்டும். விரிந்துயர்ந்த தலைப்பாகையுமொரு குடையே யாகும். குடையைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைவதிற் பொருளில்லை. ஐரோப்பியர் ஒரு கட்டிடத்திற்குள் கால் வைத்தவுடனே தொப்பியை நீக்கிவிடு கின்றனர். தொப்பியொரு குடையே யாகுமென்பதற்கிது சான்று. ஒரு வீட்டிற்குள் நுழையுங்கால் நாம் செருப்பைக் கழற்றிவிட்டுத் தலையிலுள்ள தொப்பியையோ தலைப்பாகையையோ அப்படியே வைத்துக்கொள்கிறோம். ஐரோப்பியரோ தலையிலுள்ளதைக் கழற்றி விட்டுக் காலிலுள்ளதை அப்படியே வைத்துக்கொள்கின்றனர். இந்த வேறுபட்ட வழக்கங்களுக்குக் காரணங்காண விழைவோர் மேல் நாடுகளின் வெப்பதட்ப நிலையைக் கீழ்நாட்டு நிலையோடு ஒப்பிட்டுப் பார்ப்பாராக.

இனி, நாம் வாழ்கின்ற இந்த வையகமே ஒரு குடையாகின்றது. உலகமென்பதொரு பேருருண்டை. இது விண்ணில் இடைவிடாது இயங்கி, ஞாயிற்றைச் சுற்றிச் சாட்டையில்லாப் பம்பரம்போற் செல்கின்றதென்பதைப் பள்ளி பயில் சிறுவருமறிவர். இங்ஙனம் வையகஞ் சுற்றுங்கால், அதன் ஒரு பகுதி சூரிய வெளிச்சத்திற் படு கின்றது. ஞாயிற்றின் கதிர்கள் பூமியை ஊடுருவிச் செல்லு மாற்ற லுடையனவல்ல. ஆதலின் ஒரு பகுதியில் வெளிச்சம் படுங்கால், அதற்கு எதிரே யிருக்கும் ஞாலத்தின் பகுதி நிழலிலிருக்கின்றது. வையகஞ் சுழலச் சுழல, வெளிச்சத்திலிருக்கும் பகுதி நிழலில் வரு கின்றது; நிழலிலுள்ள பகுதி வெளிச்சத்திற் செல்கின்றது. இந்த வெளிச்சத்தையும் நிழலையுமே நாம் பகல், இரவு என்று சொல் கின்றோம். சூரியனுடைய வெப்பமும் வெளிச்சமும் பூமியாகிய குடையால் தடுக்கப்படுவதால்தான் இரவு மிருளுமுண்டாகின்றன.

இங்கே எனக்கொரு நினைவு தோன்றுகின்றது. இரவும் பகலும் பூமி சுற்றுவதாலுண்டாகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றுகின்ற விரைவு ஒருமணிக்கு ஆயிரம் மைல் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

இயற்கையில் மறைந்துகிடக்கும் பல இரகசியங்களைக் கண்டுபிடித்து, வியத்தகுமுறையில் இயந்திரங்களை யமைத்து, எவரும் புகழும் வண்ணம் அரிய செய்திகளை நிகழ்த்திக்காட்டும் விஞ்ஞான அறிஞர், இந்த வையகம் ஞாயிற்றைச் சுற்றி வருகின்ற வேகத்தைக் கூட்டவுங் குறைக்கவுமொரு வழி காண்பாராயின் எவ்வளவு நலமாயிருக்கும்! அப்பொழுது, விரும்பியபடி இரவைச் சுருக்கிப் பகற்பொழுதை நீட்டலாம்; அல்லது, கும்பகர்ணர்கள் மனங்களிக்கப் பகலைக் குறுகச்செய்து, இரவை நீளவைக்கலாம். எப்படி வேண்டுமாயினுஞ் செய்துகொள்ளலாம். இது இப்பொழுது நடக்கக்கூடிய காரியமாயில்லை. ஆதலின் நமது கருத்தை எடுத்துக்கொண்ட பொருளுக்குத் திருப்பிக் கொணர்வோமாக. இரவென்பது நிழலே; இந்நிழலை யுண்டாக்குங் குடை பூமியே.

நிழல் தருகின்றவற்றிற் சாலச்சிறந்தது முகிலாகும். அலர் கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்குமென்பதுண்மை. ஆனால் குடை ஒருவர் இருவர்க்கன்றி நிழல் தராது. பெரிய மன்பதைக்கு நிழலளிப்பது மேகம். கரிய மேகங்களெழுந்து விரிந்துவானை மூடி ஞாயிற்றை மறைத்துவிடும். சில காலங்களில், அடுத்துப் பன்னாள் நாம் வெயிலை யறியாதபடி மேகங்கள் பெருகி விண்ணையடைத்துப் போடுவதைக் காண்கிறோம். ஒரு நாடெங்கு மிவ்வகையில் நிழல் பரவுகின்றது. நிழலோடு நீரையுந்தந்து மேகங்கள் உலகைக் காப்பாற்றுகின்றன. முன்னொருகால், இந்திரனது ஏவலால் மேகங்கள் திரண்டு பெருமாரி பெய்து, இடையருது வேலைக்கிடையூறு இயற்றியதால் கோவர்த்தனமெனும் மலையை எடுத்துக் கண்ணன் குடையாய் நிறுத்திய செய்தி புராணத்திற் கூறப்படுகிறது. என்னே, மலை குடையாகிய விந்தை! பெரும்பாலும் வெயிலை மறைக்க உதவுகின்ற குடை மழையைத் தடுக்கவும் பயன்படுகின்றது. மழைக்குக் காரணமாவது முகில். முகில் நிழல்தருவது; குடையும் நிழல்தருவது. இரண்டுமொரு வகையிலொத்திருக்கின்றன.

கார் என்பது மேகத்திற் கொருபெயர்; ஒரு காலத்திற்குமது பெயர். கார் என்ற சொல் கருமை என்ற பண்புப் பெயரடியாகப் பிறந்தது. கரிய மேகங்கள் எழுந்து விண்ணில் உலவுங் காலத்தைக் கார்காலமென்றனர் தமிழர். கரிய காலமெனினுமது பொருந்தும். ஆவணி, புரட்டாசி என்ற இரு திங்கள் நீடிக்குங் காலமே கார்காலம். கார் கரியது, குடையும் பெரும்பாலுங் கரியது. இங்ஙனங் குடையு முகிலு மற்றொரு வகையிலொத்திருக்கின்றன. (தொடரும்)

திருவள்ளுவர்.

திரு. சா. நடராசன்.

கண்காணிப்பாளர், கூட்டுறவுக்கழகம், வேலூர்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என மானிடம் பெற்றார் அடைதற்கான உறுதிப்பொருள்களை நுணுகி ஆய்ந்து, எதனின் எது சிறப்புடைத்து எனக்கண்டு உலகியல் அறநெறிகளுள் முதலில் கொல்லாமையும் அதற்கடுத்தாற்போலப் பொய்யாமையையும் ஆசிரியர் திருவள்ளுவனார் நயம்பட வைத்தருளினார். இவ்வாறே, அறம்பொருள் இன்பம் வீடு என்னும் இவை நான்கின் திறந்தெரிந்து, ஒவ்வொன்றின் சிறப்புக்கேற்றபடி நுணுக்கமாகத் தராதரம் உய்த்துணருமாறு சிறப்பித்துக் கூறும் ஆற்றல், தெய்வப் புலமைபெற்ற திருவள்ளுவனாருக்கேயன்றி ஏனைய புலவர்கட்டு வாய்த்தற்கரிய தொன்றாம். யாங்ஙனம் கொல்லாமையே அறநெறிகள் எல்லாவற்றிலும் முதலாகச் சிறப்பித்துக் கூறப்படுகிறதோ அங்ஙனமே ஆசிரியர் திருவள்ளுவனாரே உலகில் எப்புலவரினும் சிறந்த முதற்புலவர் என்பதூஉம், அவருளிய பொய்யா மொழியாம் திருக்குறளே உலகுக்கு ஒருநூல் என்பதூஉம் கற்றுணர்ந்தோர் யாரும் எளிதில் ஒப்ப முடிந்தனவாம். யாதுபற்றி எனின், இதில் எல்லோரும் எக்காலத்தும் அறிந்து கைப்பற்ற வேண்டிய அரிய உண்மைகள் பொதிந்து கிடத்தலான் என்க. மேலும், ஒருகாலத்தில் ஒரு நாட்டில் இயற்றப்பெற்ற நூல் மற்றொரு காலத்துக்கும் ஏனைய நாட்டினர்க்கும் பொருத்தமுடையதாயிருத்தல் மிக அருமை. நம் திருக்குறளோ எந்நாட்டார்க்கும், எம் மதத்தார்க்கும், எம்மொழியாளர்க்கும் உரியதாய் விளங்குகின்றது. அன்றியும் சொல்வளனும், பொருட் சிறப்பும், நுண்ணோக்கும், அணிநலனும், ஓசையொழுக்கும், ஆழ்கருத்தும் ஒருங்கு நிறைந்து பொலிந்து விளங்கும் இத்தீந்தமிழ் மறைக் கிணையாக ஒரு நூல், நாகரிகமும், கல்வி அறிவும் சிறந்தோங்கித் திகழ்வதாகக் காணப்படுகின்ற எந்நாட்டினும், எம்மொழியினும் இதுகாறும் தோன்றியதின்று. ஆகவே, உலகமுழுவதூஉந் தனக்கு ஒப்புயர்வின்றி

நூல் நிலையம்,

விளங்கும் முழுமுதற் றனித் தாய்மொழியும் உயர்தனிச் செம்மொழியாய தமிழ்மொழிக்கண் திருவள்ளுவனர் அருளிச்செய்த திருக்குறள் நூலேயாம் என்க.

இதுபற்றியன்றே, தமிழ்நாட்டு உயிர்க்கவியாகிய பாரதியாரும்,

> "வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
> வான் புகழ் கொண்ட தமிழ்நாடு"

என வீர உணர்ச்சி ததும்பத் தமிழ் முழக்கம் செய்தார் இனித், திருவள்ளுவனர் எழுதிய நூல் "திருவள்ளுவர்", "திருக்குறள்" என்றே இன்றளவும் வழங்கப்பெறுகிறது. ஆசிரியர் பெயரால் வழங்கப்பெறும் நூல்கள் அங்கில மொழியில் பற்பல உளவேனும், தமிழில் அவ்வாறு வழங்கப்பெறுபவை ஒரு சிலவே. இவ்வாறு ஆசிரியர் பெயரால் இந்நூல் வழங்கப்பெறுவதற்கு எத்தனையோ காரணங்களிருப்பினும், தலைசிறந்தகாரணம் ஆசிரியர், தாம் எழுதிய நூலுக்கு எடுத்துக்காட்டாக உலகில் ஒழுகி வந்ததேயாம். இவ்வொப்பறு நூலின் சிறப்பை ஆராயுமுன் அதன் ஆசிரியரின் பிறப்பு முதலியவற்றைப்பற்றி ஒரு சிலவற்றை ஈண்டுக் குறிப்பித்து மேற்செல்வாம்.

திருவள்ளுவர் பிறப்பும் காலமும்:—

திருவள்ளுவரைப் போற்றுத மக்களில்லை; மதத்தினரில்லை. மொழியினரில்லை; என்றே திட்டமாகக் கூறலாம். கடவுள் ஒருவரே எவ்வாறு எல்லா மக்கட்கும் எத்தகைய வேறுபாடுமின்றி உரியவராகின்ருரோ, அவ்வாறே திருவள்ளுவரும் எல்லா மக்கட்கும் எத்தகைய வேறுபாடுமின்றி உரியராகும் பெற்றியுடையார். இதனாலன்றே,

> "அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
> திறந்தெரிந்து செப்பியதேவை—மறந்தேயும்
> வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொல்
> கொள்ளா ரறிவுடை யார்."

என மாப்புலவராய மாமூலனர் கூறிப் போந்தார். இங்குத் 'தேவை' என்றது தெய்வத்தை என்று பொருள்படும். எத்துணை கற்று எத்துணை எழுதினும் மகனாகப் பிறந்த ஒருவனைத் தெய்வம் என்று புகழ்ந்து கொண்டாடும் வழக்கம் இல்லாத அக்காலத்திய

பழந்தமிழர் இயற்கைக்கு மாருக, உண்மைத் தெய்வத்தையேயன்றி மக்களை எளிதிற் பாடிப்புகழாத் தன்மைவாய்ந்த ஒரு பெரியார் வள்ளுவனரைத் 'தேவை' எனப் புகழ்ந்தமை பெரிதும் சிந்திக்கற் பாற்றும். இவ்வழக்கம், அன்றும், இன்றும் அங்கிலேயரிடம் காணப் பெருமை நோக்கத்தக்கதாகும். நிற்க, இப்பாட்டே துணையாகக் கொண்டு ஒரு சாரார் வள்ளுவனரை வள்ளுவ சாதியிற் பிறந்தவ ராக ஓரியைபுமின்றிக் கூறி இடர்ப்படுவர்.

திருவள்ளுவரின் பெற்ரோர், அவர் பிறந்த காலம், பிறப்பு, வளர்ப்பு முதலியவற்றை அறுதியிட்டுக் கூறத்தக்க சரித்திரச் சான் றுகள் கிடைத்தில. பண்டைக் காலத்தில் வரலாறு குறிக்கும் வழக் கம் இருந்ததாகத் தெரியவில்லை. ஒருகால், தப்பித்தவறிக் குறித்து வைத்திருந்தபோதிலும், அக்குறிப்புக்கள் செல்லுக்கிரையாயினவோ! அன்றி, வெள்ளப் பெருக்கில் மறைந்தனவோ! ஒன்றும் துணிந்து கூறுவதற்கில்லை. எனினும் வள்ளுவனர் இற்றைக்குக் குறைந்தது 1900 ஆண்டுகட்குமுன், பிறந்தவர் என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருகிய மணிமேகலையில், "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப், பொய்யில் புலவன் பொருளுரை" எனத் திருவள்ளுவரையும் அவர் நூலாகிய திருக்குறளையும் ஆசிரியர் கூல வாணிகன் சாத்தனர் சுட்டிக் கூறியுள்ளார்.

இம்மணிமேகலையும், சிலப்பத்திகார ஆசிரியராகிய இளங்கோ வடிகள் காலத்திலேயே எழுதப்பட்ட நூலாகுமென்பது சிலப்ப திகாரத்தின் இறுதியில் ஆசிரியர், "மணிமேகலைமே லுரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்" என்பதனல் துணியப்படும். இளங்கோவடிகள் சேரநாட்டில் வஞ்சிமா நகரின்கண் அரசுபுரிந்த சேரன் செங்குட்டுவனின் இளவல். சேரன் செங்குட்டுவன் சிலப் பதிகாரத் தலைவியாகிய கண்ணகிக்குக் கல்நாட்டு விழா நடாத்திய காலத்து இலங்கைக் கயவாகு முதலாவன் வந்திருந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுடைய காலம் இரண்டாம் நூற் றுண்டு என்று இலங்கை மகாவமிசத்தினலும் பிற ஆராய்ச்சியாலும் கணிக்கப்பட்டுள்ளது. எனவே சிலப்பதிகாரம், மணிமேகலை, முதலிய வற்றின் காலம் இரண்டாம் நூற்றுண்டென்பதூஉம், மணிமேகலை யின்கண் எடுத்தோதப்பட்ட திருக்குறள், திருவள்ளுவர் காலம் 2-ம் நூற்றுண்டுக்கு முற்பட்டதென்பதூஉம் எளிதிற் பெறப்படும்.

இப்பற்றின் விரிவு சங்கமிருந்து தமிழாராய்ந்த தண்டமிழ்ச் சான்ரோர் அனைய நல்லிசைப் புல்வர் என இற்றைஞான்று எடுத்துக்காட்டாக விளங்கும் ஆசிரியர் மறைமலை அடிகளார் இயற்றிய "திருக்குறளாராய்ச்சி" "மாணிக்கவாசகர் காலமும் வரலாறும்" முதலிய நூல்களில் கண்டுகொள்க.

கபிலரகவல் எனப்படும் சிறந்த தமிழ் நூலில் திருவள்ளுவரின் பெற்றோர் பெயர்கள் ஆதி என்றும் பகவன் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. சொற்போக்கு, பொருள்வளம் நடை முதலியவற்றை ஒப்பிடுவோர்க்கு இவ்வகவல் சங்க காலத்ததே யென்பதும் இக் கபிலர் சங்ககாலக் கபிலர் என்பதும் புலனாம். இனி, குறளிற் காணப்படும் சொற்கள் எல்லாம் தனித்தமிழ்ச் சொற்களே. ஆரியமும் அங்கிலமும் ஆகிய அம்மைத் தழும்புகளுடன் தோன்றும் இக்காலத்துத் தமிழன்னையைப் போலாது தூய தமிழில் எழுதப்பட்ட பண்டைக்காலத்தில் எழுந்ததாம் குறள் என்னும் ஒப்பில்லாத தூய தமிழ்மறை. அதன் முதற்பா.

"அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு" —என்பதாம்.

பிறமொழிக் கலப்பில்லாத தூய தமிழில் எழுதப்பட்ட ஒரு நூலின் முதற்பாவிலேயே "ஆதி" "பகவன்" என்ற இருவட சொற்களை ஆசிரியர் அமைப்பானேன் என்பதற்கு ஒரு சாரார் கூறுவதை நோக்குவோமாக. பண்டைக்காலந் தொட்டே பரம்பொருளை அம்மையப்பராகப் போற்றிவரும் வழக்கம் தமிழ்நாட்டின்கண் இருந்துவந்துள்ளது. இவ்வழக்கம் எகிப்து, பாபிலோனியா, எருசலேம் முதலிய நாடுகளிலும் ஆரியரின் ரிக் வேதத்திலும் பண்டைக் காலத்திருந்தமை ஒப்புமை நோக்கி மகிழ்தற்குரியதாம். ஓரறிவு முதல் ஆறறிவீறுக்வுள்ள எல்லா வுயிர்களின் மாட்டும் காணப்படும் இவ்விருவகைத் தோற்றத்திற்கு மூலம் இறைவனதுள்ளமே. அம்மை காட்ட அப்பனை அறிவதே தமிழ் தத்துவம் என்பதும் அறிய வேண்டுவதொன்றாம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்," "அம்மையே அப்பா," "ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்" என வரூஉம் சொற்றொடர்கள் இதனை வலியுறுத்தும். எனவே, தமக்கு உடம்பையளித்து உயிரை மேன்மையுறுமாறு செய்த ஆண் பெண் தத்துவங்களாகிய அம்மை அப்பரைப் போற்றும் எண்ணங்கொண்டே, ஆசிரியர் 'ஆதி பகவன்' எனும் தம் தாய் தந்தையரைக் குறிக்கும்

இருவட சொற்களை முதற்கண் அமைத்தார். அற்றேல் கடவுள் வணக்கம் செய்தவனூடே தம் பெற்றோர்களுக்கும் நன்றிகூற ஆசிரியர் கருதியிலராயின் இறைவனைக் குறிக்கும் ஏனைய தூய தமிழ்ச் சொற்களை ஈண்டு அமைத்திருத்தல் கூடும்.

மேலும் கபிலரகவலில் "வள்ளுவர் வளர்க்க வள்ளுவன் வளர்ந்தனன்" என்று கூறப்பட்டுண்மையானும் தொன்மையாகவே அப்பெயர் இருந்து வருவதானும, திருக்குறள் ஆசிரியர் பெயர் வேறாக எங்கும் காணப்பெறாமையானும் அதனையே அவர் பெயராகக் கொள்ளல் வேண்டும்.

இனி அவர் மனைவியார் பெயர் பலர் கூறியபடி வாசுகி என்பதாம். இது வடசொல் என்பது யாவருமுணர்ந்ததே. வாசுகி என்பது பாம்பு. பாம்பு என்பதைப் பாப்பு என வலித்துக் கூறுதலுமுண்டு. தமிழ்நாட்டின்கண்ணே பண்டைக்காலத்திலிருந்தே பாம்பைக் குறிக்கும் நாகம்மை பாப்பம்மை என்னும் பெயர்கள் பெண்மக்களுக்கு இடப்படும் வழக்கம் இருந்துவந்திருக்கிறது. அவ்வழக்கத்தை நாம் இன்றும் காண்கிறோம். ஒருகால் தமிழ்ப் பெயர்களையெல்லாம் வடமொழியாக்கிக் கூறும் வழக்கம் அப்பொழுதே இடங்கொண்டதோ, அன்றிப் பிற்காலத்தே வரலாறு எழுதப்புகுந்தோரால் பெயர்த் துரைக்கப்பட்டதோ யாமறியோம். மறைக்காடு, திருவானைக்கா என்பன நிரலே பிற்காலத்தவரால் வேதாரணியம், சம்புகேசுரம் என வழங்கப்பட்டமை காண்க.

"இழை நக்கி நூல் நெருடும் ஏழை யறிவனே, குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து" என்பதைக் கொண்டு அவர் நெசவுசெய்து வாழ்ந்ததாக ஒரு சிலர் கூறுவர். ஆயின் அவர் நெசவைப்பற்றியாவது, நெசவுத்தொழிலில் பயன்படும் தறி, தறியின் பாகங்கள், நூல், துணி முதலிய பொருள்களைப் பற்றியாவது தாம்யாண்டும் தம் நூலில் குறிப்பிடக் காணவில்லை. அவரது தொழில் நெசவுத் தொழிலாயின் அதற்கு ஒருவகையான முதன்மை தம் நூலில் கொடுத்திருத்தல் வேண்டுமென்றும், அவ்வகையான குறிப்புக்கள் காணப்படாமையால் நெசவுத்தொழிலை அவர்மாட்டு ஏற்றுவது அறிவுக்கேற்ற தன்றெனவும் பிறிதொரு சாரார் கூறுவர்.

(தொடரும்.)

61

திருவத்திபுரம்,

ஸ்ரீ பானுகவி மாணவர் கழக ஆண்டுவிழா.

இக்கழகத்தின் 11-வது ஆண்டுவிழா இவ்வூர் திருநாவுக்கரசு மடத்தில் ஜூன் மாதம், 7, 8 தேதிகளில் நடைபெற்றது. முதல் நாள், வந்தவாசி கல்விநெறித் துணைத்தலைவர் திரு. R. பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் B. A; L. T; தலைமைதாங்க, சென்னை வித்வான் சா. சுந்தரனார், ஆரணி வித்வான் முத்து. சு.மாணிக்கவாசக முதலியார், போளூர் வித்வான் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை ஆகியோர்கள் முறையே "சிலப்பதிகாரக் கவின், பெருமையும் சிறுமையும், தமிழ் மகள் உள்ளம் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். சென்னைப் பல்கலைக் கழக வித்வான் பட்டம்பெற்ற இவ்வூர் மாணவர்களாகிய திருவாளர்கள் T. S தேவசேனாபதி தேசிகர், K. நடேசன், G. வில்வபதி, T. V. முருகேசன், K. கோவிந்தன் ஆகிய ஐவர்க்கும் பாராட்டு வாழ்த்து அளிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் சேயாறு போர்டு உயர் கலாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. S. நடேச அய்யர் அவர்கள் B.A; L.T; தலைமைவகிக்க வித்வான்கள் T. V. முருகேசன், G. வில்வபதி, K. கோவிந்தன் ஆகியோர் "திருக்குறள் சிறப்பியல், இராமனும் பரதனும், ஞாலமுய்ய அமுதுண்டவர்" என்பனபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். இவ்வூர்க் கல்விநெறித் துணைத்தலைவர் திரு. N. அரங்கசாமி செட்டியார் அவர்கள் B. A; L. T; ஆவணக்களரி எழுத்தாளர் திரு. G. சீராம நாயுடு ஆகியோர் முறையே "தமிழ் வளர்ச்சி குறித்த நல்லுரைகள், கழகத்தின் பயன்" என்பனபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பின்னர் கழகத்தலைவர் திரு. வித்வான் K. பாலசுந்தர நாயகர் அவர்களால் நன்றி கூறப்பெற்றது.

இங்ஙனம்,

K. A. ஆதிமூலம்,

செயலாளர்.

68

பாராட்டு வாழ்த்து.

வாழ்த்துவம் வம்மின், வாழ்த்துவம் வம்மின்,
வண்டமிழ் ஊற்றம் மன்னிய புலமையீர்;
கலைபல மலிந்து கவினுற உறவும்
நிலைபெறு மறிவும் நீள்புல னின்பமும்
தந்து மக்களைத் தக்கோ ராக்கி
மேதகு செவ்வியின் மிளிர்தரச் செய்யும்
நம்மொழி தமிழ்மொழி நன்மொழி இன்மொழி
இம்மொழிப் புலமை எய்தினர்; அதனல்
சென்னைப் பல்கலைச் சீர்க்கழ கத்து
வித்துவான் பட்டம் வீறுறப் பெற்ற
புலவரைப் போற்றுதும் புலவரைப் போற்றுதும்,
வம்மின் அருந்தமி ழறிஞரே வம்மின்,
பேணுமிச் சிறப்புப் பெற்றவர் தம்மில்
தேவசே ஞபதிச் செம்மலும் நடேசப்
பெயர்பெற் ஞேனும் பெட்புடை வில்வ
பதியென் போனும் பகருநம் கழக
மாணவ ராகியிம் மாண்புற் றனரால்;
மற்றும்,
முதிரு மன்பின் முருகேசனும் சொல்
கோவிந்தப் பேர்க் குரிசிலும் அவ்வைக்
கழகமா ணவராய்க் கலைநலம் பெற்றனர்;
ஆமிவர்,
ஐவரும் தமிழின் ஐதுயர் புலமையர்.
வித்துவான் பட்டம் மேவினர் மேவினர்;
இவ்வணம் மேன்மை எய்திய புலவோர்
இந்நாள் செயத்தகும் இயல்புள செயலுள,
அவைதாம்,
தமிழ்மொழி யோங்கவும் தமிழ்க்கலை யோங்கவும்
தமிழர் உயரவும் தாழ்வுகள் நீங்கவும்
மானம் செறிந்த வாழ்வினில் மக்கள்தாம்
இன்பம் நுகரவும் பண்புடைத் தொழில்கள்
புரிதல் மனத்தொடு புரிதல்வேண் டுவதாம்;
இப்பணிக் காகும் இன்பமும் உரனும்
நல்வாழ் நாளும் நயக்கும் பதவியும்
நாளும் நாளும் நலமுடன் இறைவன்
தந்து காத்திடுக, மைந்தின்
தகவார் செல்வத் தன்மையோர் இவர்க்கே.

திருவத்திபுரம்,
7—6—40.

இங்ஙனம்,
ஸ்ரீ பாநுகவி மாணவர் கழகத்தினர்.

ஆரணி போர்டு உயர் கலாசாலையில் முதன்மைத்
தமிழ்ப்புலமை நடாத்திய

சிவ. ஆ. மாசிலாமணி முதலியார்

அவர்கள்.

1873 — 1940.

ஆரணி போர்டு உயர்கலாசாலையில் முதன்மைத்
தமிழ்ப்புலமை நடாத்திய

சிவ. ஆ. மாசிலாமணி முதலியார்

அவர்களின்

நிறைநாள் விழா.

ஷெயாரின் மாணவருள் ஒருவரும், ஆம்பூர் ஹிந்து ஹைஸ்கூல்
ஆசிரியருமாகிய

திரு. S. சிவராமன் B. A; L. T; எழுதுவது.

உலகை ஊட்டி உய்விக்கும் உயர்குலம் உழுகுலம். அதுவே வேளாண் குலமாம். அக்குலத்தினர் பல்வகைப் பகுப்பினர் ஆவார். அவர்களில் தானை கட்டி வேளாளர் என்பார் ஒரு சாரார். தானை எனின் சேனை அல்லது படை எனப்படும். இப்பகுப்பினர் நம்பழந் தமிழ் மன்னராகிய முடியுடை வேந்தர் மூவர்பால் செருக்களத்துச் சேனைத் தலைவராக வழிவழி விளங்கிய மாண்பால் தானை கட்டி வேளாளர் எனப்படுவார்: இவர்கள் உடையார், கிழார், முதலியார், பிள்ளை, கவுண்டர், நாயகர் முதலியனவாய்ப் பல காரணப்பற்றிய பட்டப்பெயர்களை யுடையவராவார்.

தேச சரித்திரத்திற் சிறப்புற்றதாகிய ஆரணி என்னும் பழம் பதியில் இப்பகுப்பினரில் ஒரு பிரிவினர், பல நூற்றாண்டுகட்கு முன்பே குடியேறி வாழ்ந்து வருகின்றனர். அன்னோர் தம் முன்னோர் வழியொழுகிச் சேனை வீரராகவும், தமிழ்ப் புலவர்களாகவும் விளங்கி இருந்தமை பற்றித் தமிழ் வேந்தர்பால் வளநாடும் இளங்கன்றும், பல பரிசுகளும்பெற்று வாழ்வாராயினர். இவர்கள் அரசச் செல்வத்தினராய்த் தமதில்லத்தில் யானைக்கன்று முதவிய விருதுகளுடன் விளங்கிய சிறப்பால், மக்கள் இவர் தங் குடும்பத்தினரை ஆனை கட்டிகள் என்று அழைக்கலாயினர். இன்றும் இக் குடும்பத்தினர் தலைப்பெயர் ஆனைகட்டி என்றே விளங்கும். இவர்களின் இல்லமும் தண்டுகார் வீடு எனப்படும்.

ஆனைகட்டி அவல்தார் முனியப்ப முதலியார் என்பார். சென்ற நூற்றாண்டில் இக்குடும்பத்தினரில் சிறப்புற்று விளங்கினவர். இவரே கடந்த பர்மியர் யுத்தத்தில் வெற்றிகொண்ட பிரிட்டிஷ் படைஞரில் அவுல்தார் பதவி வகித்துக் கவர்னர், கவர்னர் ஜெனரல், வைஸ்ராய் முதலிய பல்லோர்பால் சிறந்தவிருதுகளையும், பரிசுகளையும் பெற்றார். இன்னும் இவரது வீர தீரச்செயல்களைப்பற்றிய அருங் குறிப்புக்கள் பின் அமைய நேர்ந்துழி கூறப்பெறும். இப்பெரியார் மகப் பேறின்றித் தம் நெருங்கிய தாயத்தினரில் ஆனைகட்டி பச்சையப்ப உடையார்

மகனார் ஆனைகட்டி இராமசாமி முதலியார் முதற்புதல்வர் முருகேச முதலியார் எனப்படும் முனிசாமி முதலியாரைத் தமக்கு மகனாக வரித்துக்கொண்டார் (ஸ்வீகாரம் பெற்றார்.)

ஆனைகட்டி முனிசாமி முதலியார் சிறந்த தமிழ்ப்பெரும் புலவர். சந்தம், வண்ணம் முதலிய கவிகள் பாடுவதில் அருணகிரியாரோ என்று பலரும் எண்ணக்கூடிய திறமுடையார். முருகனை உளமுருகப் பாடிப் பாடிப் போற்றும் ஆற்றல்சான்ற வரத்தினர். இவர் இயற்றிய பொருள்விளக்க நிகண்டு மிகவும் பயனுடையது. திருக்கயிலாய பரம்பரைத் திருக்கோவலூர் ஆதீனம், ஜாகீர் ஆரணி, திருமலை சமுத்திரம் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் திருக்கோயில் கொண்டருளும் முருகனை நாளும் இடைவிடாது நெஞ்சம் நெக்குருகப் பரவிப் பல நூல் மாலைகள் அச்செவ்வேள் திருவடிகளுக்குப் பாடிச் சூட்டியுள்ளார். ஷை மடாலயத்து நான்காவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய தேசிக மூர்த்திகள்பால் தீக்ஷைபெற்றவர். தற்போது ஐந்தாவது குருமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய தேசிக மூர்த்திகள் திருவடித் துணைகட்கு வழித் தொண்டுசெய்யும் பேரன்பினர். இப்புலவர்பெருமான் ஆர்க்காடு நவாத்தி பஜார் ஏகாம்பர முதலியார் அருந்தவப் புதல்வி அம்மணியம்மை என்னும் பெண்ணரசியை மணந்து சாலிவாகனம் 1796 ஸ்ரீமுக யாண்டு மார்கழித் திங்கள் 22உ ஞாயிற்றுக்கிழமை இரவு 20 நாழிகைக்கு மேல் பூச நட்சத்திரம் கடக லக்கினத்தில் ஈன்றெடுத்த சான்றோர் நம்மருமைக் கண்மணியனைய மாசிலாமணி முதலியார் அவர்கள்.

இவர் தம் சிறிய தந்தையும் வாலாஜா முனிசிபல் ஹைஸ்கூலில் தலைமைத் தமிழ்ப்புலமை நடாத்தித் தற்போது ஒய்வுபெற்று விளங்குபவரும் ஆகிய உயர் சைவத் திருவாளர் ஆ. கமலநாத முதலியார் அவர்கள்பாலும் மற்றுமுள்ள பெரும் புலவர்கள்பாலும் தமிழ் நூற்களில் தக்கபுலமைபெற்று நல்லாசிரியரானார். சிலகாலம் வாலாஜா முனிசிபல் ஹைஸ்கூலில் தமிழாசிரியராக விளங்கியும், தனிமையில் பலர்க்குத் தமிழறிவு புகட்டியும், ஆரணி போர்டு ஹைஸ்கூல் தமிழ் ஆசிரியப் பதவியில் வீற்றிருந்தும் வாழ்வாராயினர் 193?-ம் ஆண்டு முதற்கொண்டு ஒய்வுபெற்று ஆரணியிற் சிலகாலம் இருந்துவந்தார். நம் அருமைப் புலவர் சிவ. ஆ. மாசிலாமணி முதலியார் அவர்கள் ஆம்பூர் கன்கார்டியா போதனுமுறைக் கலைக்கழகத்தில் தலைமைத் தமிழ்ப்புலவராகவும், நம் தமிழ் அணங்கின் ஆசிரியராகவும் உள்ள தம் செல்வப் புதல்வர் பாலகவி ஆ. மா. சிவஞான முதலியார் அவர்கட்குத் துணையாக ஆம்பூருக்கடுத்த சோலூரில் தமிழரண் என்னும் தமது இல்லத்தில் வாழ்ந்துவருங்கால் நிகழ் விக்ரமயாண்டு ஆனித் திங்கள் 9-ம் நாள் சனிக்கிழமை (22—6—'40) காலை 8-மணிக்கு உத்தராட நட்சத்திரம் சித்தயோகத்தில் சிவனடி நீழலுற்றார். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பாலாற்றில் தகனமும், அடுத்த திங்களன்று

பால் மஞ்சனமும், அடுத்த 16-ம் நாளாகிய ஆனி 24-ம் நாள் (7-7-40)ஞாயிற்றுக்கிழமை சோலூர்ப் பாலாற்றங்கரையில் இறுதிக் கடன் சடங்குகளும் நிறைவேறின.

ஆர்க்காடு மௌன தேசிகர் நிலையம் நிறீஇயினர் திரு. வே உ. திருவேங்கடசாமி முதலியார், ஆர்க்காடு கண்ணன் திருச்சபை உரிமையாளர் திரு. T. S G. வரதராஜ செட்டியார், மாதிமங்கலம் ரைஸ்மில் கேளுர் திரு K. இராமாநுஜ முதலியார், ஆரணி ஈ. சிதம்பர முதலியார், வாணியம்பாடி யோகானந்த நிலையத்தலைவர் கோவிந்தராஜ முதலியார், சோலூர் மணியம் வேங்கடசாமி முதலியார், வித்வான் ஆ கமலநாத முதலியார், கோலார் ஆ வா. தங்கவேல் முதலியார் முதலியோரும் பிறரும் உடனிருந்து நடத்துவிக்க இறுதிக்கடன் சடங்குகள் சிறப்புற நிகழ்ந்தன.

அன்று மாலை மூன்று மணிக்குமேல் நிறைநாள் எய்திய புலவர் பெருமான் குடும்பத்தினர் ஆறுதல்கருதி, வாணியம்பாடி ஹிந்து நடுத்தரக் கலைக்கழகத் தலைவர் B. சாவளப்பா B. A; அவர்களாலும், ஆம்பூர் முஸ்லிம் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் B. சுந்தரேச முதலியார் அவர்களாலும், தம்மூரணில் ஒரு தேற்றரவுக் கூட்டம் கூட்டப்பட்டது அக்கூட்டத்திற்கு வேலூர் ஊரீஸ் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு C. S. இராஜாப் பிள்ளை அவர்கள் தலைமைவகித்தார்கள். தலைவர் முன்னுரையின் பின்னல் வித்வான் உயர் சைவத் திருவாளர் ஆ. கமலநாத முதலியார் அவர்கள் ஆறுதலுரை கூறி ஆசியருளினர்கள். பிறகு திரு K. P. சந்தோஷம் அவர்கள் B. A; L T; வேலூர் ஊரீஸ் உயர்கலைக் கழகத் தலைவர் தேற்றரவுக் கூட்டம் என்பதன் பொருளை விளக்கி இத்தகைய அமயங்களில் அதன் இன்றியமையாமையையும் எடுத்தோதி அனைவரையும் ஆறுதலுறுமாறு வாழ்த்தியருளினர்கள். அங்ஙனமே ஆம்பூர் முஸ்லிம் ஹைஸ்கூல் தலைவர் திரு. A. சையத் யாகூப் ஸாஹிப் பஹதூர் B.A;L T; அவர்களும், திரு ஈ. சிதம்பர முதலியார் அவர்களும் (Head-Clerk Duputy Inspector of Schools Arni) ஷை மாசிலாமணி முதலியார் அவர்களின் சிறப்பியல்களைப் பாராட்டி அனைவர்க்கும் ஆறுதலும் ஆசியும் வழங்கினர்கள்.

திருக்கைலாய பரம்பரைத் திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துத் தேசிக மூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திருவாளர்கள் வேலூர் மஹந்து உயர்கலாசாலைத் தலைவர் மணிகோடீஸ்வர முதலியார் B, A; L T; திருவத்திபுரம் போர்டு உயர்கலாசாலை முதல் உதவி ஆசிரியர் கவிராஜமாகேசரி M. S. மீனுட்சிசுந்தரம் அய்யர் B. A; L. T; ஆரணி நகராண்மைத் துணைத்தலைவர் S. A. மீனுட்சிசுந்தர முதலியார், மஹாவித்வான் வல்லம் வைத்தியலிங்கம் பிள்ளை, வித்வான் வே ஐயா நாயகர் முதலிய தக்கோர்களிடமிருந்து அன்று கிடைக்

கப்பெற்றனவும், பெரியோர் பிறிடத்திருந்து முன்னரே வந்திருந்தனவுமாகிய, திருமுகங்களும், தேற்றரவுத் தாள்களும் முற்றும் அவைத்தலைவர் அவர்களால் கூட்டத்திற் கறிவிக்கப்பெற்றன:

சிவ. ஆ. மாசிலாமணி முதலியார் அவர்களின் பிரிவாற்றாது அவர்க்குப் புலவர்பலர் பாடிச்சூட்டிய இரங்கன்மாலை ஆம்பூர் முஸ்லீம் ஹைஸ்கூல் தமிழாசிரியர் திரு. B. சுந்தரேச முதலியார் அவர்களால் அரங்கேற்றப்பெற்றது.

நிறைநாள் எய்திய பெரியாரின் செல்வப் புதல்வர் ஆ. மா. சிவஞான முதலியார் தம்மருமைத் தந்தையவர்களின் பிரிவாற்றுப் பெருந்துயருடன் அன்னார் சிறப்பியல்புகளை விளக்கித் தமக்கும் தம் குடும்பத்தினர்க்கும் தேற்றரவுரைத்து ஆறுதலுற வாழ்த்திய அனைவர்க்கும், இரங்கன்மாலை சூட்டிய யாவர்க்கும் நன்றி அறிவித்து வணக்கம் கூறினர். மாலை 6-30 மணிக்கு அவைத்தலைவரால் கூட்டம் இனிது நிறைவேறியது. பிறகு சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

திருவாளர்கள்:—

வடார்க்காடு ஜில்லா போர்டு மெம்பர் S. முருகேச முதலியார், Dr. C. N. நாதமுனி நாயுடுகாரு L. M. (*Dublin*) *Z. T. D. & S. Vienna. Medical Officer*, S. சடகோப முதலியார் *P. W. Inspector*, T. S நரசிம்மன் *B. A. B. E. ElectricalEngineer*, ஆலாங்குப்பம் மிராசுதார் கிருஷ்ணமூர்த்தி ராவ், M. K. நாராயண சர்மா, *M. A., B. Ed.*, B. R. எபிநேசர் *B. A; L. T;* J. வேதநாயகம் *B. A; L T;* M. S. ராமச்சந்திர அய்யர் *B. A;* (*Sub-registerar*) ஆசிரியர் P. S. கிருஷ்ணசாமி அய்யர், M. தியாகராஜ முதலியார் (*Sanitary Inspector*) மளிகை P. A. பொன்னுசாமி நாட்டார், V. N. சிங்காரவேல் முதலியார் (*Head Clerk Sub-registerar Office*) D. பெஞ்சமன், ஆம்பூர் ஹிந்து ஹைஸ்கூல் தலைமைத் தமிழ் ஆசிரியர் P. M. வேணுகோபால நாயுடுகாரு, V. சந்திரநாத நைனர், இராமச்சந்திரா பிரஸ் உரிமையாளர் V. C. இராமச்சந்திர நாயுடுகாரு, U. அப்துல் காதர் ஸாஹிப், S. இராமலிங்கம் பிள்ளை, கர்ணம் S. R தேவநாயகம் பிள்ளை முதலிய பிரபலஸ்தர்களும், பிறரும் ஆம்பூரிலுள்ள மூன்று ஹைஸ்கூல்களின் பல மாணவரும் ஆசிரியரும் தனித்தனியாகவும், தத்தம் துணையோருடன் திரள்திரளாகவும் அன்று பல்வகை ஊர்திகளினும், காலினும், காரினும் விரைந்து விஜயம்செய்து நிறைநாள் எய்திய பெரியாரின் குடும்பத்திற்கு ஆறுதல்அளித்தகாட்சி என்றும் பாராட்டற்குரியது.

அன்று பிற்பகல் ஏராளமான ஏழைமக்களுக்கு அறுசுவை உண்டி அளிக்கப்பெற்றது.

ஆரணி போர்டு உயர்கலாசாலை முதன்மைத்
தமிழ்ப்புலமை நடாத்திய

சிவ. ஆ. மாசிலாமணி முதலியார்

அவர்கள் பிரிவாற்றாது
புலவர்பலர் பாடிச்சூடிய

இரங்கன்மாலை.

இராய வேலூர் ஊர்ஹீஸ் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர்
திரு. C. S. இராஜாப்பிள்ளை அவர்கள் எழுதியது.

1. பாவலர்கள் புகழ்பெருமைப் பாலிநதி வளஞ்சுரக்கும்
 பண்பின் மிக்க
காவலர்கள் நனிவிரும்புங் கருதுபுகழ்த் தொண்டைவளக்
 கவின் சேர்நாட்டில்
நாவலர்கள் நயந்துறையும் நலமிக்க ஆரணியாம்
 நகரந் தன்னில்
நாவலர்தம் பெருந்தகையாய் நல்வாழ்வு நடத்திய நன்
 முனிசாமிப் பேர்.

2. சீருற்ற பெரும்புலவன் புகழ்விளங்க அவன்மகனாச்
 சிறந்து தோன்றி
நாருற்ற நன்மனத்து நன்னூல்கள் பலவாய்ந்து
 நாளும் நாளும்
பேருற்று வந்தடைந்த மாணவர்க்குப் பேரின்ப
 வழியே காட்டிப்
பாருற்ற உறவொழித்துப் பரகதியே சென்றடைந்த
 பண்பு மிக்கோய்.

3. என்னரிய நட்பாளா! எழில்மிக்க மாசில்லா
 மணியே! நீதான்
இன்னலுறு மிவ்வுலக வாழ்விகந்தே இறைவனடி
 ஏகலுற்றாய்
உன்னுடைய பிரிவதனால் உன்னன்பர் உன்மைந்தன்
 உனது காதற்
பொன்னனைய கற்பினுயர் என்னன்னை படுந்துயரம்
 புகலற்பாற்றோ.

4. உன்னரிய மலர்முகத்தை உள்ளமகிழ்ந் தேயுரைக்கும்
உனது சொல்லை
என்னனைய நண்பரெலாம் காணும்நாள் இனியுண்டோ
என்றே எண்ணி
இன்னலுற அதுமதியா திறைவனடி யேதுணையா
ஏகிச் சென்றாய்
மன்னியசீர்ப் பெரும்புலவ மாசில்லா மணியேநின்
மனந்தான் கல்லோ.

5. பலநூலுங் கற்றுணர்ந்த பான்மையினாற் பண்டிதனாச்
சிறந்து வாழும்
நலமிக்க நின்குமரன் நல்லசிவ ஞானமெனும்
நாம மிக்கோன்
வெலற்கரிய நின்னருமைத் திறம்நினைந்தே விம்மலுற
விமலன் தாளே
நலக்குரிய தெனவெண்ணி நாடியதும் நலந்தானோ
நவிற்று வாயே.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழகம்
வாழ்க சிவ ஞானம் வளர்ந்து.

ஆரணி ஜாகிர் காமக்கூர் மாபேராசிரியர்

மு. சுந்தர முதலியார் அவர்களியற்றிய

எண்சீராசிரியம்.

விக்கிரம ஆனியொன் பதைச்சேர் காரி
மேவுதேய் பிறைமூன்றாந் திதியுத் ராடம்
இக்குவள ராரணியில் வளமாய் வாழ்ந்த
இயன்முனிசா மிப்புலவ னீன்ற சேயன்
தக்கசிவ ஞானப்பா வலனைப் பெற்றோன்
தமிழறிஞன் மாசிலா மணிநா வல்லோன்
நக்கன்மணி நீற்றையணிந் தைந்தெ ழுத்தை
நாடினா னவனடியிற் கூடி னானே.

ஆரணி போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ் ஆசிரியர் வித்வான்
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் பாடிய

கட்டளைக் கலிப்பா.

கோனைக் கட்டிகழ் தாமரைத் தாளனைக்
குற்ற மில்லியை நற்றணி கைப்பொருப்
பானைக் கட்டிகப் பாடிப் பணிந்திடும்
பாவலன்சிவ ஞானவேள் பாட்டனும்
ஆனைக் கட்டி யெனுமுனி சாமியென்
றற்பு தத்தமிழ் நாவலன் றந்தவன்
றானைக் கட்டிவே ளாண்குல தீபமே
தன்னைப் பின்மாசிலா மணி யண்ணலே.

ஆர ணிக்குப் பெரும்புக ழாக்கிடும்
ஆரணியு யர்ந்தபள் ளித்தமிழ்ப் போதகன்
நார ணிக்கும் பரசிவ னுக்குமெந்
நாளுங் கோயி லெனவுள நல்கினேன்
தார ணிக்குப் பெருமையென் றேகுறள்
சாற்று மவ்வண நேற்றிருந் தானின்று
கூர ணிக்கை மழுப்படைக் கொற்றவன்
குரைக ழற்றுணை கூடியின் பார்வனே.

நேரிசை வெண்பா.

விக்கிரமத் தானிசனி வீழ்பிறைமூன் றாநாளின்
மிக்கிசையுத் ராடத்தின் மேவினான்—இக்கினிமைச்
செந்தமிழ்ப்பா வாணன் திருமாசிலா மணிவேள்
கந்தனருள் தந்தை கழல்.

இராயவேலூர் ஊரீஸ் காலேஜ் தமிழாசிரியர்
திரு. கீ. வேணுகோபால நாயகர் அவர்கள் இயற்றியது.

மாசிலா மணியே! மாசிலா மணியே !!
சுற்றமுந் துணையுஞ் சூழ்ந்திடு நண்பரும்
நூல்பல கற்று நுண்ணுணர் வெய்திய
சிவஞா னப்பேர்ச் செல்வக் குமரனும்
காணப் பெறுதனைக் கலக்க முற்றிட
மலைமகள் கேள்வன் மலரடி நீழல்
சென்று பேரின்பம் திளைத்தனை நீயே.!

ஆரணி நகருக் கணியெனத் திகழ்ந்த
இலக்கண இலக்கிய எழில்நூற் கடலெலாம்
நிலைகண் டுணர்ந்து நெறியினின் வாழ்ந்த
முனிசா மிப்பேர் முன்னோன் மகனே!
மாசி லாமணித் தேசிக மணிநீ!
இவ்வுல கிகந்ததால் எம்ம னோர்க்குக்
கவலை பெரிதே கவலை பெரிதே.
வேந்தரும் புகழ விளங்குநின் னில்லம்
ஆனைக் கன்றும் அழகொழிந் ததுவே
அன்புரு வாயநின் அருமகன் இவனே
செல்வமும் கல்வியும் சிறந்திடப் பெற்றுப்
பல்வளம் எய்திப் பண்புறு வாழ்வின்
சிறந்திடு மாறு நீ திருவருள்
புரிந்திட வேண்டுவம் புண்ணிய நின்னே.

மஹாவித்வான் வல்லம்

திரு. வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் பாடிய

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆறாத காதலினாற் சிறுகாலை யேபுலமை அடைவின் மேவி
மாறாத மனநலத்தால் மாசிலா மணிப்பெயர்தான் மன்னிக்கற்றுந்
தேறாரைத் தேற்றியெழிற் றமிழ்த்தாயை இதுகாறுஞ் செழிப் பித்தாய் அப்
பேறாய பெருந்தொண்டைச் சிவஞானம் செயநினைந்து பேர்வுற் றாயோ
என்னேற்றான் இவற்பயத்தற் கென்றீகேற்ற சிவஞானம் என்னும் சேயும்
முன்னேற்றான் றனைமணந்த மொய்குழலும் சுற்றமென மொழிதற் காகும்
நன்னோக்க முடையாரும் நண்பர்களும் பெரிதுள்ளம் நலியநீங்கும்
உன்னோக்க மென்னைகொலோ மாசிலா மணிநாமம் உற்றாளோயே!
கற்றாருக் கிடனாகிக் கனம்பெறுநல் ஆரணியின் கண்போல் வந்து
மற்றாரும் மதித்திடவே மாசிலா மணிநீதான் வாழ்ந்த தொன்றோ
பெற்றானும் பெரும்புலவன் பெறப்படுநீ யும்புலவன் பெறுதல் உன்னால்
உற்றானும் பெரும்புலவன் என்றால் இவ் வேற்றமளந் துரைத்தற்காமோ.

தம்மோ டொருங்கிருந்து துணைப்புலமை நடாத்திய
சிவ. ஆ. மாசிலாமணி முதலியார் அவர்களின்
பிரிவாற்றுப் பெருந்துயர்கருதி
செந்தமிழ்ப் பேராசிரியர் ஆரணி போர்டு ஹைஸ்கூல்
திரு. வே. ஐயா நாயகர் அவர்கள்
மனங்கசிந்துரைத்த

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிய விருத்தம்.

1. பாரணியும் தண்டகமாம் பழநாட்டில் தமிழ்ப்புலவர்
பல்லோர் வாழும்
ஆரணியிற் பரம்பரையாய் அமர்ந்துதமிழ் வளர்வேளாண்
அருங்குலத்தாய்
தாரணியுந் தானைக்கட்டி ஆனைக்குட்டி முனிசாமி
தந்தவத்தில்
ஏரணிய வருமாசிலாமணியுன் பிரிவுதனை
எவன்மறப்பேம்.

2. மாசிலாமணியேயுன் மாண்பெல்லாம் உரைப்பதற்கு
வலியமோயாம்
ஏசில்லா இன்மொழியும் எழில்வடியுந் திருமுகத்தில்
இளநகையும்
கூசில்லா தளவளவுங் குணமும்பே ரமைதியையே
கொண்ட நோக்கும்
ஆசில்லா அன்புமிக ஆதரவு நின்போலே
யார்செய் வாரே.

3. செந்தமிழை நாடோறுந் தெளிகிற்பாய் தெளிந்ததனைச்
சிறார்க்கும் மற்றும்
வந்தபெரி யோர்களுக்கும் வழங்குவாய் ஆரணியில்
வளர்ந்தே யோங்கும்
இந்தவுயர் தரப்பள்ளி நடுத்தரத்தின் உயர்தரமா
எய்துங் காலை
முந்தைதமிழ் ஆசானும் முதன்மையுற்றாய் என்துணையாய்
மூன்றாண் டுற்றாய்.

4. நின்னுடைய முன்னோர்கள் யாண்டுபல வாகநரை
   நேரத் தோன்றார்
கொன்னுடைவா ணாளிறுதி எண்பதாம் ஆண்டிற்குள்
   குறுகா ரானார்
உன்னுடைய நல்வாழ்நாள் எழுபதினு மூன்றாண்டு
   குறைந்த தென்னே
மின்னொளிர்செஞ் சடையண்ணல் விரைக்கமலத்
   தாளடைய விரைந்திட்டாயே.

5. உங்கள்பரம் பரையினர்கள் தமிழறிஞர் இந்நாளும்
   உளரா னாரால்
தங்கியவா லாஜாவில் தண்கமல நாதனெனும்
   தமிழ்த்தா தாவும்
எங்குமிசை ஆர்க்காட்டில் ஷண்முகனும் சிவஞான
   ஏந்தல் தானும்
இங்குனது குடும்பத்தார் எனிலிதற்குக் கரிவேறொன்
   றேனோ ஐயா.

6. தக்காரார் தகவிலரார் என்பதவ ரவரெச்சந்
   தன்னாற் காண்க
மிக்காரென் றுரைத்ததமிழ் வேதத்தின் பொருள்விளக்க
   மேலோன் உந்தை
அக்காலத் துணையளித்த வதனாலே தக்கவனென்
   றறியப் பெற்றான்
இக்காலஞ் சிவஞானந் தனைத்தருநீ தக்கவனென்
   றேத்தப் பெற்றாய்.

7. 'தந்தைமகன் தனக்காற்றித் தருநன்றி அவையத்துச்
   சான்றோர் தங்கள்
முந்தியிருப் பச்செயலாம்' முதற்கடனை நீசெய்து
   முடித்தாய் அண்ணல்
"மைந்தன்தந் தைக்காற்றும் மாவுதவி யிவ்வரிய
   மகப்பேறெய்தத்
தந்தையென் னோற்றான்கொல் எனுஞ்சொல்லைச்
   சிவஞானஞ் சாற்றச்செய்தான்.

8. சிவஞானம் எனும்உன்றன் திருமகன்றான் தமிழ்நாட்டுச்
செல்வம் ஆனான்
புவிவாழும் தமிழ்ப்புலவர் புகலானான் நிறைபுலமை
பூண்டான்பால
கவியானான் கவிவாணர் காமுறுமின் சுவைமுதிர்ந்த
கவிகள் சொற்றான்
பவஞான விருளகற்றித் தமிழ்க்கலையைப் பரப்புகின்ற
பரிதியானான்.

9. தமிழ் நூலின் கரைகண்டான் ஆங்கிலமும் மிகக்கற்றான்
தமிழர் வாழத்
'தமிழணங்கை'த் தோன்றவைத்தான் ஆழூரிற்
கிறிஸ்தவரால் தழைக்கும் பள்ளித்
தமிழரசான் எனவமைந்தான் தந்தையுனைத் துணைகொண்டு
தனியே சென்று
தமிழரணில் வதிகின்றான் தனைவிட்டிங்ககன்றதுநீ
தருமந் தானே

10. மண்ணுலகில் தமிழ்அறியும் வேளாளர் தமிழ்மரபில்
வந்து தித்தாய்
எண்ணியவா றறம்வளர்க்கும் இயல்புணர்ந்தே தமிழறத்தை
என்றும் செய்தாய்
புண்ணியத்தால் தமிழ்வளர்க்கப் புதல்வனும் சிவஞானப்
புலவன் தந்தாய்
விண்ணவர்க்கும் அரிதான விடையன்றா ளினிதமரும்
வீடுற்றாயே.

—:(———):—

சிவ. ஆ. மாசிலாமணி முதலியார் அவர்கள்

சிவகதியடைந்த பிரிவாற்றப் பெருந்துயர் குறித்து
ஷெயாரின் மாணுக்கருளொருவரும் ஆரணி நகராண்மைத் துணைத் தலைவரும் ஆகிய

S. A. மீனுக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் பாடிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

1. சீரணி மாமணி மாடஞ் செறிந்திலங்கு மாரணியிற்
சிறப்பினேங்குந்
தாரணியோர்புகழ் சரதநெறி தவறு வேளாளர்
தகைமை சான்ற
பேரணி தொல்குடி யானைக்குட்டியெனும் மாசிலா
மணிப்பேர் பெற்றோய் !
காரணி கண்டத்திறைவர் கழலடைந்தாய் நின்பிரிவால்
கரைந்தோ மந்தோ !

2. திருந்தெழில்சேர் மடவரல் அம்புயத் துயர் அம்புயமருவிச்
சைவமோங்க
உருவிலிதன் னுருவமமைந் துலகிலவ ஞானமொழிந்
துன்னற்கின்பம்
தருந்தமிழ் தேர் சிவஞானந் தனையுதவும் பெருந்தகையோய்!
தரணிநீத்துன்
னருந்தமர்கள் வருந்தவிடுத் தமருலகு புகுந்தனையோ !
அண்ணல் அந்தோ.

3. பனிமதலை தலைக்கணியும் பரம்பரனர் பதம் பரசும்
பாவலோய் நீ
தனிமதலை தனைப்பயந்து தனையை யிலாத் தவலறவித்
தாணிமீதில்
இனித்த தமிழணங்குதித்த இருமநியிற் குறைதவிர்ந்த
தென்று கொல்லோ,
நனி துயரம் யாங்களுற நம்பனுடன் கலந்துவந்தாய் !
ஞாயமேயோ ?

4. சீரியநற்கலை பரப்பிச் சேர்ந்தவருள் ளிருளதனைச்
சிய்க்கு மாற்றல்
சூரியனே யெனத்திகழ்ந்த நின் மறைவாலிம் மகியிற்
சூழு மெல்லை
நேரியநல் லொழுக்கமுறு சிவஞானத் தமிழ்ப்பானு
நிலைக்கத் தந்த
வேரியல் பூந்தாரணி வித்தக விறைவ ரொடுகலந்து
மினிர்கமாதோ.

சிவ. ஆ. மாசிலாமணி முதலியார் அவர்களின்

சிறிய தந்தையும், வாலாஜா முனிசிபல் ஹைஸ்கூல்
மாஜி தலைமைத் தமிழ்ப்புலவரும் ஆகிய
உயர் சைவத் திருவாளர்

ஆ. கமலநாத முதலியார் அவர்கள் பாடிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

உற்றார் நட்டார் ஊராரும் உனையே நினைத்தே யுருகிடவும்
கற்றார் கற்றுக் கரிசதனைக்கா சேயின்றிப் போக்கிட் டோர்
செற்றார் புரங்களெரி செய்தோன்சிவ லோகத்தை நீயுற்றால்
மற்றாரெமக்குத் துணையாவார் மாசிலாத மாமணியே. (1)

அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு மனைத்தும் வாய்ந்த நின்மனைவி
இச்சையோடே குறிப்பறிந்தே யினிதா யொழுகி நடந்திடவும்
நச்சா டரவமணி ந்தபிரான் நம்புங் கயிலை சென்றனையே
பொச்சமில்லா வம்புஜம்மாள் புலம்பல் நினக்கு நன்றாமோ. (2)

காந்திமதி நாதப்பேரோன் கவினார் நின்றன் முதற்பேரன்
சேந்தனனைய விளம்பேரன் சீரார்சிற்றம் பலச்செல்வன்
தீந்தேன்மொழிசங்கரி யென்னுந்திருவார்போர்த்திஇவர் துயர்க்கோர்
சாந்தியருளல் நின்கடனே தக் கோய் மாசிலாமணியே. (3)

சரஸ்வதிப்பேர் தனைக்கொண்ட சாற்றாமுன்றன் மருமகளும்
பரசுதன்னை யேந்துகின்ற பரமன் கயிலை பக்குவமாய்
நரலையென்பதில் லாமல் நாடியடைந் தாயெனக் கருதி
உரமேயின்றி வருந்துதலும் ஓதுமுனக்கு நன்றாமோ. (4)

தங்கவேலாம் மைத்துனனும் தரணிதன்னில் வாடிடவும்
தங்கவேலாயுதப் பெருமான் தந்தைவாழுங் கயிலைதனைப்
புங்கமுடனே நீபடையப் புலம்பிப் புலம்பித் துயருறவும்
நங்கள் பரமன் வாழ்க்கையை நாடி நடத்தல் நன்றாமோ. (5)

மக்கள் சுற்றம் வாழ்வனைத்தும் மனத்தில் சிறிதுங் கொள்ளாமல்
இக்கேயனைய மொழியுடைய இனிய வுன்றன் மனைதனக்கிங்
கக்கு மரவு மணிந்தபிரான் அரியகயிலை தனைநோக்கி
தக்கவுதவி தனைச்செய்யுந் தனையனிருக்கவே கினையே. (6)

மணியும் மருந்து மவுடதமும் மாசிலாத மணியெனவே
பணியுங்கங்கைக் கொன்றைமலர் பண்பாய்க் கொள்ளும் பரன்கயிலை
தணியாவேட்கை தனைக்கொண்டே சார்ந்தேவாழ விரும்பினையே
அணியார் சுற்றமெலாம் வாழ அடைவாயெமக்குத் துணையாரே.(7)

சந்தநிறையும் நின்றந்தை தரணிதன்னில் நின்றனக்கு
முந்தா தரவால் கலைநல்கி முந்தும் புலவனெனச் செய்தான்
நந்தா தீபச்சுடரனைய நல்லோய்நீயு நின்மகற்கு
வந்தா தரவால் புவிதன்னில் வயங்கும் நிலைமை வகுத்தனையே. (8)

மகன் படுந்துயரங் காண்பதன்
முன்னே மாண்பமர் பரிவுடனு வந்து
அகனமர்ந் துதவியாதா வுடனே
அடைவுடன் வேண்டுவ வீந்தாய்
சகமதிற் றந்தை யுதவிடு மன்பிற்சதமடங்
குதவினருனைப்போல்
தகவுடைத் தந்தை தரணியிலுண் டோ
சாற்றிடற்கரிது நின்புகழே. (9)

திருப்பத்தூர் முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழ்ப் புலவரும்,
சேலம் முனிஸிபல் காலேஜ், வாணியம்பாடி இஸ்லாமியா காலேஜ்
முதலிய பற்பல இடங்களிற் புலமை நடாத்தியவருமாகிய

லா. சி. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள் பாடிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

என்னருமைத் தமிழ்த்தந்தாய்! எங்குற்றாய்! எங்கொளித்தாய்!
இசைவல் லோர்கள்
தன்னருமைத் தமிழ்த்தந்தாய்! செந்தமிழ்தேர் புலவரெலாம்
தயங்கி நிற்க
உன்னருமைத் தமிழ்மொழியாய்! உவட்டாத சுவைத்தமிழாய்!
உண்மை வாய்ந்த
மன்னருமைச் சிவஞானக் கவிபால கவிஞர்தமை
மறந்தேயந்தோ! (1)

அந்தோ! நின் அன்புவழிந் தொழுகிநலம் ததும்புமொழி
அறிஞ ரெல்லாம்
வந்தோதி மகிழ்ந்துபல பொருள்நயத்தை மாந்திடுவர்
மா நூல் வல்லார்
எந்தாதை! எந்தாதை! எனவியம்பி நினைநாடி
இயல்நூல் கற்பார்
செந்தாது கமழூரத்தாய்! மாசில்லா மணிக்கவியோய்!
சென்ற தெங்கே? (2)

எங்கே நம் புலவர்மணி எங்கேநம் புலவர்மணி
என்றி யம்பக்
கொங்கேந்தும் மலர்முகத்தாய்! தேனடுத்த கொன்றையினன்
குரைக ழற்கீழ்
அங்கேந்தும் அடியவர்கள் பாடும்செந் தமிழ்ப்பாக்கள்
அன்பாய்க் கேட்கும்
மங்காத கீர்த்தியது பெற்றனையோ! மாசில்லா
மணிப்பே ரோயே! (3)

பேராத சிவஞானப் பேரின்ப வெள்ளத்தே
பிறந்த செம்மல்
தேராத விலக்கியவி லக்கணங்கள் தேர்ந்தகவித்
திறமை பூண்டே
ஆராவ லுளநின்னில் வந்துதித்த சிவஞான
அழக னார்க்குப்
பேராத திறனளித்த மாசில்லா மணிப்புலவ!
பிறங்கு மன்பே! (4)

பிறங்குதமிழ் மொழியூட்டி மக்கள்தமை நன்னெறியில்
பெரிதும் செல்ல
கறங்குநெடுங் கடலுலகில் தமிழ்ப்பேரா சிரியர்பதம்
கலக்க மின்றி
அறங்குலவி வகித்துவந்து நூல்பலவு மியற்றுமக
வமுத மீந்து
திறங்குலவு சிவஞானச் செம்மலென உயர்த்திட்ட
சீர்மை யோனே! (5)

சீர்மைபெறு ஆரணிபோர் டைஸ்கூலில் முதன்மைபெறு
செந்த மிழ்த்தேர்
நேர்மைபெறு புலவர்குழாம் மேன்மையுற வீற்றிருந்து
நேர்ந்த தக்கோர்
கூர்மைபெறு பேரறிவில் நடமாடித் தமிழ்த்தொண்டே
குறிப்பாய்க் கொண்டு
நேர்மைபெற உஞற்றிவந்த மாசில்லா மணிப் புலவ
நேய மிக்கோய்! (6)

நேயமிகு விக்ரமவாண் டானித்திங் களிலொன்பான்
நீலன் நாளில்
தூயகதி ருதயமணி எட்டினுத்தி ராடத்தில்
துகடீர் சித்த
நாயகயோ கத்திலரன் திருவடிநீ ழற்புகுந்த
நாவல் லோயே!
தேயகமெங் குங்கலக்க முறஒளித்த மாசில்லாத்
திருவே தேனே! (7)

தேனன்ன கவிநயத்தாய்! கற்கண்டின் பொடிகலந்த
தீம்ப ருப்பின்
தீனன்ன சொற்பொழிவாய்! சிவனருளே உன்னி உன்னி
செய்யும் யோக
வானன்ன துறவியலாய்! வழுத்துப்செந் தமிழ்ப்போகம்
வாரி வாரி
வானன்ன மக்களுற வழங்குசிவ மாசில்லா
மணிநல் லோயே! (8)

நல்லோர்கள் நாயகமே! நாவல்லோர் தாடகமே!
நன்மை யார்ந்த
பல்லோர்கள் பாவகமே யாய்ந்தொழுகி என்ஞான்றும்
பலனே மாந்தி
எல்லோரும் தான்பெற்ற பலன்பெறநற் கலேயளித்தே
இருந்த சீர்த்தி
வல்லோர்கள் புகழ்மணியே! மாசில்லா நவமணியே
வாழ்க என்னே. (9)

87

தேற்றரவுத் திருமுகங்கள்.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

சிவமயம்.

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர்

ஸ்ரீலஸ்ரீ

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளவர்கள்

எழுதியருளியது.

இன்ப அன்பினீர் !

தங்கள் பிதா இறைவனடியடைந்த செய்தி தங்கிய தங்கள் கடிதங் கண்டாம். முதலிற் றிடுக்கிடச் செய்தது.

ஆயினும் "வயதானவர்கள் தங்கள் கடமையைச் செய்ய வாய்த்தது. இறுதிக்காலம் இருந்து வேண்டுவன செய்தவர்களே குமாரர்கள். இராமமூர்த்தியும் அடையாப்பேறு அடைந்தீர்கள்" என்பது ஞாபகம்வர ஒருவாறு மனநிலைபெற்றோம்.

நாம் இனிச் செய்வது அவ்வுயிர் நலமுறச்செய்ய வேண்டுவனவற்றைச் செய்தலாம்.

முருகப்பிரானை வேண்டுகிறோம். ஐந்துமாத காலமாகத் திருப்பாதிரிப்புலியூரில் இல்லாமல் செஞ்சி, சிவகிரி விருத்தாசலம் இவிடங்களிலிருந்து திருக்கோவலூரில் வசிக்கின்றோம். திருநீறனுப்புகிறோம். தரித்து நலமுறுக.

ஞானியார் மடாலயம்,

கீழூர்,

திருக்கோவலூர், 5-7-40

போளூர், 26-6-40.

அந்தீந் தமிழணங்கி ஞசிரிய! எந்தோழன்
உந்தை யிறந்த வுதுகேட்டே—எந்தமனம்
நொந்தவகை யெங்ங னுவலுவம்நீ சொற்றபடி
மைந்தவிவண் போதல்நல மாம். (1)

இன்றேநாம் நாகை இடைமருதூ ரேகிமணம்
நன்றேகண் டாங்கிருந்தெம் நண்பருடன்—மன்ருடும்
எம்மா னருளா லினிதுவந்துன் கைக்கடிதம்
அம்மாகண் டேவருந்தி ஞம். (2)

அவ்வை யிவணில்லை ஆதலால் நாமவர்க்குச்
செவ்வையுடன் சொல்லுந் திறமில்லை-'கவ்வை
உலகின் பெருமை உது'வ ருந்தலென்னே
இலகுகநல் லூக்கமெலா மேய்ந்து. (3)

வி. சாமிநாதப் பிள்ளை,
தமிழாசிரியர்,
போர்டு ஐஸ்கூல், போளூர்.

செங்கம், 24-7-40.

அன்புமிக்க சிவஞானம் அவர்கட்கு நலமுண்டாகுக.

உங்கள் தந்தை எந்தை பரசிவத்தின் திருவருள் நீழலெய்திய செய்தி சின்னாட்களுக்கு முன்புதான் கேட்டேன். பல்வகை இடையூறுகட்கும், இடையீடுகட்டும் இலக்காகி, இன்பமறியாது, அலமருவேனுக்கு இச்செய்தி பெருந்துயரை விளைத்ததென்பது சொல்லவேண்டாததாகும். "வாழச் செய்த நல்வினையல்லது ஆழுங் காலைப் புணை பிறிதில்லை" என்ற பெருமொழியே இன்றும் துணையாவது. இத்துயர் என்றேனும் எய்துதற்குரியதே. இதனை விலக்கும் உரிமையும், வன்மையும் நம்பால் இல்லை. இதுகுறித்து நீர் கவலையுறுவிரேல் மேற்கொண்டுள்ள தமிழ்ப்பணி இடையீடுபடும் "இடுக்கண் வருங்கால் நகுக." அதனை அடுத்தூர்வது வேறொன்றும் இல்லை. அணிமையில் நேரே வந்து காண்பன். உங்களை அலைக்கும் இத்துயர் கெடுக. நல்லது பெருகுக. அன்பர் சிவஞானத்தின் தமிழ்ப்பணி மிக்க சீர் பெற்று நிலவுக.

ஔவை. சு. துரைசாமி.

நண்பரே! வணக்கம், ஆரணி, 26-6-40.

தங்கள் முடங்கல்கண்டு நெஞ்சம் ஒன்றுஞ் செய்யத் தோன்றப்பெறமாட்டாது முடங்கலும் தடங்கலும் முதலிய அடங்கலும் உற்றது. திருவாவடுதுறைப் பெருமானை இழந்து வாழ்தல் சிவஞான முற்ற மாணிக்கவாசகனுக்குத் தக்கதன்று. மற்றைய அன்பரும் மணியிழந்த, பணியன்னாராய்க் கிடக்கற்பாலரே. அதுவும் மாசிலா மணி, அம்மணி ஆரணி முதலிய இடங்களில் வாழ்வோர், வாழ்ந்தோர், கற்றோர், கல்லாதோர், நட்டார், நள்ளாதார் எவர்க்கும் தெரிந்த செம்மணி. பொறாமைக் குறையுள்: அறிவானுறற் பாலதாய அடக்கத்திற்கெல்லை: நட்புக்குரிய நற்பண்பு இயல்பாயுறப்பெற்ற சிறப்புருவம்: தமிழ்த் தாய்க்குத் சிறந்த சேய். இத்தகைய சேயாம் தந்தையைப் பிறந்தநாள் முதலாகக் கண்டு மகிழ்ந்த சேய்களாகிய நாம் பிரிந்து சிறிதேனும் ஆற்றற் கியலாதெனல் திண்ணமேயாம். ஆயினும், கற்றனவற்றை மறத்தல் நம்மனோர்க்குத் தக்கதன்றே! என்செய்வது? பிரிவாற்றாமையாம் இயற்கையைக் கற்றன மறவாமையாம் செயற்கை வெல்லல் எளிதன்று அரிதே! அவ்வருமையைச் செய்யின் நாம் செயற்கருஞ் செயல் செய்தேமாவோம். அவ்வாறுக்கும் பின்வரும் இன்றமிழ்த் தொடைகளை நினைவுகூர்வாம்; மாசிலாமணியின் ஆசிலா அருளான்.

நெருநல் உளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு.

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

நன்றாங்கால் நல்லவாக் காணபவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.

இவற்றையும் இன்ன பிறவற்றையும் எண்ணி அமைதியுற முயல்கின்றேன். அவ்வாறே நீங்களும் அமைதியுற வேண்டி முருகப்பிரானை முப்போதும் போற்றுவேன்.

இனி, இவ்வலுவலை ஒழுங்குபெற நடத்தித் தரவல்ல நண்பர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்களை அழைத்தல் நன்று. சேக்கிழார் திருநாளையும், மூன்றுநாளும் உடனிருந்து நன்கு நடத்தியுதவிய அவர்க்கு நாம் நன்றி பாராட்டக் கடவோம். என்பணியும் தவறாது நிகழும்; வரத்தவறேன். நடத்திப் பழக்கமிலேன். கண்ணமங்கலத்திலும் அவரே நடத்தியது தங்கட்கும் தெரியும்.

முத்து சு. மாணிக்கவாசகன்.

புகழ்ப் பூந்துணர்.

பண்டைக்காலத்தே நந்தமிழ் நாட்டிலிருந்த சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை வேந்தரும், பிற சிற்றரசரும் போற்றிய தமிழன்னை பிற்காலத்தே பிறமொழிக்கலப்பால் அகத்தே மாசுபடிந்து முகம்வாடித் தவிக்கும் காலத்தில் அம்மாசகற்ற வான் பயிரென்னத்தமிழ்நாட்டிடையே இறங்கிவந்த செம்புலவர் பலர். அவருள் நங்கெழுதகை நண்பரும் தமிழாசிரியருமான திரு. சிவஞான முதலியார் அவர்களின் தந்தையரான புலவர் திரு. சிவ. ஆ. மாசிலாமணி முதலியாரும ஒருவரென வைத்தெண்ணப்படும் பெற்றியுடையார். கல்லாமையானும், நூல் காவாமையானும் தமிழர் பலர் மக்கள் சாதியிற் பிறந்தும் மாக்களாகவே உயிர்வாழுந் தன்மைகாணவாற்றாராய் அவர் மடமையை நீக்கி அவர்க்குத் தமிழறிவு உண்டாகச் செய்வதே தமிழன்னைக்குச் செய்யும் சீரிய பணியாம் என உளங்கொண்டு நம் புலவர் தமிழாசிரியராய்த் தம்முயிருள்ளளவும் தந்தனித் தமிழ்ப் பெயர்க்கேற்ப ஆரணியின்கண் ஓர் தூய மணிவிளக்காய்த் திகழ்ந்திருந்தார். அவரது எளிய வாழ்க்கையும், தூய ஒழுக்கமும், கனிந்த சொல்லும் அவரோடு பழகினோர்க்கு மகிழ்ச்சியூட்டுவனவாம். நம் நாட்டிடைத் தோன்றிய எத்துணையோ தமிழ்ப்புலவோர் அறிவிலும் ஆற்றலிலும் தலைசிறந்து விளங்கினரேனும், மக்கள் அவரைக் காணும் கண் இன்றிப் புறக்கணித்த பெரும் பிழையால் அவர்தம் அறிவுச் சுடர் உலகெங்கும் பரவ இயலாது, கானிடை மலர்ந்த மலர்போலவும் ஆழியிடைப் புதைந்த முத்துப்போலவும், அவர்தம் பெருமையை நாம் அறியுமாறில்லை. எனினும், "செத்த பிறகுணர்ந்தே புகழ் சேகண்டி கொட்டிடுவர்-பித்துலகோர் மதிப்பேன்? முருகன் பேர் சொல்லத் தொண்டுசெய்வோம்" என்னுங் கருத்துடையராய்ச் சிலர் கைம்மாறு கருதாவான் முகில்போன்று ஆற்றிய பணியைப் போற்றுதல் செய்தல் நந்தலையாய கடனும். இதனோடமையாது "பண்டிதர் கொண்ட தமிழினை நாட்டில் பாமரரும்" பெறச் செய்தலே நம் வாழ்க்கையின் பயனென உறுதிகொண்டு, ஒவ்வொரு வீட்டிலும் தமிழிசை ஒலித்திடவும், ஒவ்வொரு வீதியிலும் தமிழ்ப்பள்ளி ஓங்கி வளரவும் முயற்சிசெய்தலே நம் கண்முன் மறைந்த தமிழ்ப் புலவோர்க்கு நாம் செய்யும் கைம்மாறும். அத்தகைய புலவரின் பிரிவுக்காற்றாது வருந்தும் அவரின் குடும்பத்தினர்க்கும், சிறப்பாகத் தமிழ்ப்பணியில் ஈடுபட்டுள்ள நம் நண்பர் திரு. சிவஞான முதலியார் அவர்கட்கும் இக்கூறியவாறன்றி வேறு ஆறுதல் எளியேன் கூறுமாறில்லை.

பருவுடல்நீத்த நம் புலவர் அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நீழலில் ஒன்றி சாந்திபெறுவதாக.

சா. நடராசன், வேலூர்.

(பிறகடிதங்கள் பிறகு வெளிவரும்.)